# ...ரீ சிதம்பரனார்

C:34



ஆசிரியர் நூற்பதிப்புக் கழக

# வீர சிதம்பரனார்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

*Approved by the Madras Text-Book Committee*
*for Class use: Vide page 121, Part II*
*of Consolidated List dated 19-5-54.*

பதிப்பாளர் :
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு :: சென்னை 1

பதிப்புரிமை] 1954 [ரூ. 1-0-0

முதற் பதிப்பு : 195
இரண்டாம் பதிப்பு

# முகவுரை

பூத உடம்பு மறையும்; புகழ் உடம்போ மறையாது!

இன்று வீர சிதம்பரனாரின் பெயரால் கப்பல் ஒடுகிறது : கலாசாலையொன்றும் நடைபெற்று வருகின்றது. வீர சிதம்பரனாரின் புகழ் உடம்பினுக்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ?

வ. உ. சிதம்பரம் பிள்ளை நம்மவர்; நல்ல தமிழர்; நானிலம் மெச்ச வாழ்ந்தவர்; பேரறிஞர்; பெரும்புலவர்; பெரிய பேச்சாளர்; அரிய எழுத்தாளர்.

"உச்சிமீது வானிடிந்து வீழினும் அச்சமில்லை அச்சமில்லை!" என்று பாரதியார் கர்ஜித்தார். அதற்கு வீர சிதம்பரனாரின் வாழ்க்கையே ஒர் இலக்கியம்.

ஆதலின், அவரது வாழ்க்கை வரலாறு நமது தமிழ்ச் சிறுவர் சிறுமியருக்கு இனிய விருந்தாம்.!

M. S. சுப்பிரமணிய ஐயர்

1. தோற்றுவாய்
2. நாட்டுச் சிறப்பு
3. குலநலம்
4. கதையும் விளையாட்டும்
5. குரு பக்தி
6. ஏழைகளின் தோழர்
7. வழக்கறி வன்மை
8. வள்ளியம்மை
9. தமிழ் ஆராய்ச்சி
10. சுதேசியக் கிளர்ச்சி
11. திலகதாஸர்
12. நாவாய்ச் சங்கம்
13. போட்டியும் சூழ்ச்சியும்
14. சர்க்கார் சீற்றம்
15. நம்மவரின் அநீதிகள்
16. தொழிலாளர் வெற்றி
17. உச்சநிலை
18. பாலர் திருநாள்
19. சுப்பிரமணிய சிவம்
20. சிறை புகுதல்
21. புரட்சித் தீ
22. அறிவுச் செல்வம்
23. குற்றச் சாட்டு
24. இரு ஆயுள் தண்டனைகள்
25. மந்திரியும் மறுகல்
26. வினையின் பயன்
27. சிறை உடையும் உணவும்

| | | |
|---|---|---|
| 28. | துன்பமும் துயரும் | 63 |
| 29. | காசே பெரிது | 65 |
| 30. | சிறையிலும் சேவை | 68 |
| 31. | கலெக்டரின் படுகொலை | 70 |
| 32. | இலக்கியப் பணி | 73 |
| 33. | குணசீலம் | 75 |
| 34. | நாட்டாரின் நன்றி | 78 |
| 35. | முடிவுரை | 82 |

# வீர சிதம்பரனார்

—: :—

## 1. தோற்றுவாய்

ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோம். குடியரசு ஆட்சி முறையும் கொண்டுள்ளோம். உலகத்தாரின் முன்னிலையில் உயர்பதமும் எய்தி நிற்கின்றோம். அத்தகைய அரிய நிலைமை அடையும் முன்னம் இத்தேசத்தை ஆங்கிலேயர் கட்டி ஆண்டு வந்தனர்.

'வந்தே மாதரம்' என்றால், 'தாயே, உன்னை வணங்குகின்றேன்,' என்பதே பொருளாம். இப்போது எல்லாரும் 'வந்தே மாதரம்' என்று வாழ்த்தலாம்; வணங்கலாம். ஆங்கிலேயர் ஆண்டு வந்த அந்நாளிலோ, 'வந்தே மாதரம்' என்றால், வந்து விடும் மோசம்! கிடைக்கும் கசையடி! கிட்டும் சிறைக் கூடம்! ஆதலின், 'வந்தே மாதரம்' என்று வாய் விட்டுச் சொல்ல அன்று பலரும் அஞ்சிக் கிடந்தனர்.

அந்நாளிலே, "'வந்தே மாதரம்' என்று வாழ்த்துவேன்! முடி தாழ்த்துவேன்; ஆருயிர் அன்னையைப் போற்றுதல் செய்வேன்; எனது உயிர்போயினும் சரி," என்று வீரத் தமிழரொருவர் சிங்க நாதம் செய்தார்; "சொந்த நாட்டில் பிறர்க்கு அடிமை செய்யேன்!" என்று கர்ஜித்

தார்; எங்கும் சுதந்தர ஆசையை எழுப்பினர். இம் மட்டோ, அவர் செய்தது!

'சிங்களம் புட்பகம் சாவகம்—ஆதிய
தீவு பலவினும் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடி யும்நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு.

என்று சுப்பிரமணிய பாரதியார் பாடியதைத் தழுவி, நமது தமிழ்நாட்டின் புகழை எங்கும் பரப்பவும், அவ்வீரர் துணிந்தார் அது பற்றி அவர் கப்பலும் ஓட்டி, காரியத்தில் இறங்கினர். அது கண்டு ஆங்கில அதிகாரி, ஆத்திரமே கொண்டு ஆர்ப்ப ரித்தார்;

'சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன் குத்திக் கொல்லுவேன்!'

என்று கூறி அச்சம் விளைத்தார்; மேலும் 'சிறைக்குள்ளே தள்ளுவேன்!' என்றும் சீறிக் கிளம்பினர். அப்போதும், 'அச்சமில்லை, அச்ச மில்லை,' என்று அவ்வீரர் துணிந்து பேசினர்; பணிந்து பயந்து போகவில்லை! அவர் வாய்மொழி யாகவே பாரதியார் பாடிய பாடல் இது:

'சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்எண்ணம்
சாயுமோ! ஜீவன் ஓயுமோ!
இதையத் துள்ளே இலங்கும் மகாபக்தி
ஏகுமோ! நெஞ்சம் வேகுமோ!'

தீரத்துக்கும் தியாகத்துக்கும் தேசபத்தர் பின் வாங்கார். முன்னம் ஒரு புறவின் பொருட்டுச் சிபிச்சக்கரவர்த்தி தனது உடம்பை அரிந்து அரிந்து கொடுத்தான் என்று புராண இதிகாசங் கள் புகலும். அவ்வாறே கொடுக்கத் தயார் என்று கூறி நின்றவர் தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்.

அந்நாளிலே நம் தமிழகத்தில் அரசியல் துறையிலே புதிய விழிப்பை ஊட்டியவர் அவரே. தமது சொல்லாலும் செயலாலும் அவரே தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பினர்; தமிழருக்குத் தனிச் சிறப்பும் உண்டாக்கித் தலை நிமிர வைத்தார்.

அல்லாமலும், அவர் அருங்கலை விநோதர்; பெரிய தமிழ் வாணர்; சிறந்த எழுத்தாளர்; சீரிய பேச்சாளருமாவர். அவ்வீர சிதம்பரனரது சரிதம் இங்கே சொல்லுவோம்.

## 2. நாட்டுச் சிறப்பு

'கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்விதம் ஆயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு !'

அத்தமிழகத்திலே ஒரு பாகம் பாண்டி வள நாடு. அவ்வளநாட்டில் முத்தும் பவழமும் முன்னம் மிகுந்திருந்தன. அங்கே வைகை, பொருநை என்னும் நதிகள் பாய்ந்து, வளஞ்சுரக்கும். தேனினும் இனிய தமிழ்மொழி அங்குதான் பிறந்து வளர்ந்து பெருமையுடன் ஓங்கியது.

முன்னாட், அங்கே தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தன. புலவர் பலர் அச்சங்கங்களில் அமர்ந்து, அரிய பெரிய நூல்களை இயற்றி, நம் தமிழ் மொழியாம் அன்னைக்கு அணிகள் பல பூட்டினர். அவர்களுக்கு உதவியெல்லாம் புரிந்து வந்தனர் பாண்டிய வேந்தர்.

அப்பாண்டி வளநாட்டின் தென்பாகம், தென் பாண்டி நாடு எனப்படும். திருநெல்வேலிச் சீமை

என்றும் அதனை வழங்குவது உண்டு. 'திக்கெலாம் புகழும் திருநெல்வேலி' என்று தேவாரம் பேசும். நறுக்தொகை முதல் நைடதம் வரையில் பாடியருளிய அதிவீரராமன், அச்சீமையைச் சேர்ந்தவன்.

தமிழ் முனிவரான அகத்தியர் வாழ்ந்த பொதியமலை என்பது அத்தென்பாண்டி நாட்டில் உள்ளது. நீலத் திரைக் கடலின் ஓரத்திலே நித்தம் தவஞ்செய்யும் குமரி முனையையும் அங்கே பார்க்க லாம். இழைய வீசும் தென்றல் காற்று அங்கிருந்தே கிளம்பி வடக்கு நோக்கி வீசும். சந்தன மரங்கள் அங்கே மிக அதிகம்.

வீரமாந்தரும், வெற்றி வேந்தரும், விழுமிய புலவரும் அச்சீமையில் தோன்றி, நமது தமிழகத் திறுக்கு அழியாச் சிறப்பு ஊட்டியுளர். அங்கே வீரம் வாய்ந்த மறவரும், தீரம் நிரம்பிய வேளாள ரும் முக்கியமான குடிமக்களாவார்கள்.

நாண் பூட்டிய வில்லைக் கையிலே தாங்கி, தோளிலே அம்பறாத் தூணி தரித்து, காலிரண்டி லும் வீர கண்டை பூண்டு, அரும்போர் புரிந்து, வெற்றி மாலை சூடியதால், ஆங்குள்ள மறவர் வீர மறவர் ஆயினர். வேளாளரோ, விருந்திருக்க உண்ணுதார்.

"எந்நாளும் காப்பரே வேளாளர் காண்," என்று கவிச் சக்கரவர்த்தியார் கம்பர் பாடியதாக ஒரு செய்யுள் உண்டு. எனவே, வேளாளரின் சிறப்பு, வெளிப்படை. 'ஓதுவார் எல்லாம் உழு வார்தம் தலைக்கடைக்கே,' என்னும் பழமொழியும் வேளாளரின் பெருமையை வெளிப்படுத்தும்.

'வெள்ளையரே, வெளியேறுக!' என்று ஆதி நாளிலேயே வீறு பேசிய வீர பாண்டிய கட்ட

பொம்மு என்பார், அச்சீமையின் சிற்றரசருள் ஒருவராய் இருந்தவர். "வானம் பொழிகிறது; பூமி விளைகிறது; நாங்கள் பாடுபடுகிறோம்; ஆங்கிலக் கும்பினிக்குக் காணிக்கை எதற்கு?" என்று அவர் போர் முரசு கொட்டினார்; அருஞ்சமரும் விளைத்தார்.

அவ்வீரபாண்டிய கட்டபொம்மு ஆண்டுவந்த நாடு பாஞ்சாலங்குறிச்சி என்று சொல்லப்படும். அந்த நாட்டில் பிறக்கும் சிறு முயலும் பெரிய வேட்டை நாயைத் துரத்தியடிக்கும் என்று பெரியோர் புகழ்ந்து பேசுவர். ஆதலின், அந்நாடு வீரம் விளையும் நாடாம்.

அக்குறிச்சிக்கு அருகே ஒட்டப்பிடாரம் என்னும் சிற்றூர் ஒன்று இருக்கின்றது. அதனை முன்னம் தென்அளகை என்று வழங்கி வந்தனர். அதன் அருகே அழகிய வீரபாண்டியபுரம் என்னும் நகரம் தலைசிறந்து நின்றது. அளகை அல்லது அளகாபுரி என்று பெயர் படைத்தற்கு ஏற்ப, ஒரு பழமொழி உண்டு. அது, 'கொடுத்தால் கட்டபொம்மு கொடுக்க வேண்டும்; விளைந்தால் கரிசல் காடு விளைய வேண்டும்,' என்பதாம். கட்டபொம்மு ஒரு கொடை வள்ளல் என்றால், ஆங்குள்ள கரிசல் காடோ, வேண்டுவதையெல்லாம் விரும்பி அளிக்கும் இயல்பு உடையது.

முன்னம் அங்கே ஏரிகளும் வாவிகளும் கூவங்களும் கிணறுகளும் நிரம்பி நிலவளத்தை வளர்த்து வந்தன. ஆனது பற்றி, அங்கே வரையாது கொடுக்கும் வள்ளன்மை மிகுந்திருந்தது.

வீரபாண்டிய கட்டபொம்முவைத் தென்னாட்டுச் சிங்கம் என்பர். அவ்வேந்தர் ஆண்டு வந்த

நிலப்பகுதியை வீரபூமி என்று விளம்புவர். அப் பூமியில் ஓர் ஊரான தென்னளகையின் மக்கள் உலையா முயற்சியும், சலியா உழைப்பும், திண்ணிய நெஞ்சும், நுண்ணிய அறிவும் படைத்தவர்கள்.

நமது தமிழகத்தின் பழஞ்சரிதத்தை அறிந்தார் அனைவரும் அந்த ஒட்டப்பிடாரம்—தென்னளகை—மக்களை இன்றும் உயர்வாகவே மதித்து வருவர். அத்துணைச் சிறப்பு வாய்ந்த சிற்றூரில் தோன்றியவர் நம் கதாநாயகரான தூத்துக்குடி வ. உ. சிதம்பரனார். உயர்ந்த ஊரில் பிறந்தவர் உயர்வே எய்துதல் இயற்கைதானே!

## 3. குலநலம்

குலம், கோத்திரம், குடிப்பிறப்பு என்று கூறுவர். அம்மூன்றும் ஒரே பொருளைக் குறிக்கும் பெயர்களாம். மனம், மொழி, மெய் இவற்றில் நேர்மை வாய்ந்தாரை உயர்குடியினர் அல்லது உயர்குலத்தவர் என்று வழங்குதல் இயற்கை.

இனிய கனிகளை உதவும் அழகிய மரங்களை அனைவரும் விரும்பி அடைவர்; அவற்றின் கனிகளைப் புசித்துக் கொண்டாடி மகிழ்வர். அவ்வாறே, உயர்குலத்தில் உதித்தாரிடம் ஒழுக்கமும் வாய்மையும் ஓங்கி நிற்கும். அன்னாரை எல்லாரும் ஏற்றமாகப் பேசுவர். அன்னவரிடம் ஈகையும் இன்சொல்லும் நிரம்பி நிற்கும்.

அத்தகைய உயர்குலத்தில் வந்து பிறத்தல் முன்னைய நல்வினையின் பயனாகும். நம் சிதம்பரனார் அவ்வாறான உயர்குலத்தில் உதித்தவர். அவர் பாட்டனார் கல்விச் சிதம்பரக் கவிஞர் என்று

பெரும் பெயர் பெற்றவர்; பெருங்குணமும் பொருந்தியவர்.

அவர் எல்லாருக்கும் இனிது அமுது ஊட்டும் உயரிய வேளாண்மைத் தொழில் புரிந்தவர். அன்பும் திருவும் அவரிடம் குடிகொண்டிருந்தன. 'செல்வத்தின் பயன் செவ்வீதின் ஈதல்,' என்பதற்கு அவர் ஓர் உதாரணமாகத் துலங்கி நின்றார்.

> 'நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
> குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.'

இஃது ஒரு திருக்குறள். இயற்கையிலேயே வளமை நிரம்பி, விடாது உரமும் ஊட்டப்பட்டு உள்ள நிலத்தில் விதை தெளித்தால், அவ்வித்து முளைத்து எழும்பும் பொழுதே செழித்து விளங்கும். அதுவே போல, வழி வழியாக நல்ல குணங்கள் அமைந்துள்ள குலத்தில் பிறந்தவர்கள், தங்கள் பிள்ளைப் பிராயத்திலேயே எல்லாரும் புகழுமாறு இனிது நடந்து வருவார்கள் என்பதே இக்குறளின் பொருளாம்.

அக்கல்விச் சிதம்பரக் கவிஞருக்குப் பிறந்த மைந்தருள் ஒருவர் உலகநாதப் பிள்ளை எனப் படுவார். அவர் இளமையிலேயே உயரிய நடையும், சீரிய நெறியும் கொண்டு குலவினார்; தக்க வயது வந்ததும், நீதி வழக்காடும் வழக்கறிஞர் தொழிலில் புகுந்தார்.

அத்துறையிலே அவர் நன்னெறி ஒழுகி இருநிதி சேர்த்தார். உற்றாரும் உறவினரும், அற்றவரும் வறியவரும், வந்து கேட்கும் முன்னம், குறிப்பறிந்து அவர் நிரம்பக் கொடுத்து உதவி வந்தார்; அதனால், சீரெல்லாம் எய்திச் சிறப்பே பூண்டு நின்றார்.

அந்த உலகநாதப் பிள்ளைக்கு உதித்த மக்கள் எழுவர் ஆவர். அந்த எழுவருள் மூவர் புதல்வியர்; மற்றையோர் புதல்வராவர். அப்புதல்வருள் இரண்டாமவரே நம் சிதம்பரனார். தசரத புத்திரரே போல நான்கு மைந்தரும் பொருந்தி வாழ்ந்து வந்தனர்.

அந் நால்வருள் **மீனாட்சி சுந்தரம்** என்பார் கடைசிப் பிள்ளை. அவர் எல்லாருக்கும் இளைஞர். ஆனாலும், எவருக்கும் இளையாத நற்குண நற்செயல்கள் வாய்ந்தவர்; ஈடிலா அறிவும் சோதர வாஞ்சையும் நிரம்பியவர்.

இராமபிரானிடம் இலக்குவன் நேசமும் பாசமும் பூண்டிருந்ததேபோல, அவரும் சிதம்பரனாரிடம் அன்பும் ஆர்வமும் பூண்டிருந்தார். சிதம்பரனாரின் மீது அரச நிந்தனை வழக்கு ஏற்பட, அதில் அதிகாரிகள் இரட்டை ஆயுள் தண்டனை விதித்தார்கள். அக்கொடுந்தண்டனையைக் கேட்டதும், தம்பியார் மீனாட்சி சுந்தரம் ஆறாத்துயர் கொண்டார்; அறிவும் இழந்தார்; அதிர்ச்சி அடைந்தார். அது காரணமாகவே சின்னாளில் தமது ஆவியையும் விடுத்து ஈசன் பாதம் சேர்ந்தார்.

சிதம்பரனாரோ, ஆண்மையும் திண்மையும் ஒரு வடிவாய் வாய்ந்தவர்; உச்சிமீது வான் இடிந்து வீழ்வதானாலும், சிறிதும் சலியாத மனவலி படைத்தவர்; 'ஊழி பெயரினும் தாம் பெயரார்!' என்னும் மொழிக்கு ஓர் இலக்காய் இருந்தவர்; 'நன்றே வரினும், தீதே நேரினும் எல்லாம் சிவன் செயல்!' என்று கருதும் பான்மை கொண்டவர்.

1872-ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், 5-ஆந் தேதி, வியாழக்கிழமை, சிதம்பரனார் இப்பூமியில்

கண் விழித்தார். அப்போதே, "இப்பாலன் பெரும்புகழ் எய்துவான்; பாட்டனாரது சாயலே வாய்ந்துள்ளான்; ஆதலின், சிதம்பரம் என்று பெயரிடுக," என்று பெரியோரும் பிறரும் சொல்லினர். அவ்விதமே பெயர் சூட்டப்பெற்றது.

## 4. கதையும் விளையாட்டும்

குழந்தைகளுக்குத் தேனில் குழைத்து மருந்து தருதல் நம் முன்னோர் வழக்கம். அவ்விதமே கதையில் நீதியைக் கலந்து புகல்வர் பெரியோர். கதை என்றால், எல்லாரும் விரும்பிக் கேட்பர். குழந்தைகளோ, குதூகலத்துடன் செவி சாய்க்கும்.

நீதிக்கு ஒரு நிதி போன்றது நமது தேசம்; நீதிக்குத் தாயகமும் ஆகும். நமது தேசத்தில் இல்லாத நீதி, எங்கும் இருக்க முடியாது. இராமாயண பாரத பாகவதங்களே இதற்குச் சான்று பகரும்.

நமது தேசப்பெரியார் அனைவரும் தமது பிள்ளைப் பருவத்திலே அப்புராண இதிகாசக் கதைகளைக் கேட்டு, அறிவு மிகுந்து, ஒளி வீசினர் என்பது பிரசித்தம். ஐந்தில் வளைந்தால் ஐம்பதில் வளையும். ஆதலின், சின்னஞ்சிறு வயதில் நீதிகளைப் புகட்டுதல் அவசியம்.

சிதம்பரனார் தமது பிள்ளைப் பருவத்திலே பாட்டனாருடன் சென்று, தினம் பாரதம் கேட்டுக் களிப்பார். தவிர, வீட்டிலே ஒவ்வொரு நாளும் பாட்டியார் திருவிளையாடற் கதைகளை அக்குழந்தைக்குக் கூற, அவர் கனிந்து செவி மடுப்பார்.

இரவிலே அவர் பாட்டனார் பண்பு மிகுந்த இராகவன் கதையினைச் சுருக்கியும் விளக்கியும்

உரைப்பார். நாள்தோறும் பிச்சைக்கு வரும் ஆண்டிகளும் அரிய கதைகளைப் பாடி வருவார்கள். அவற்றையெல்லாம் சிதம்பரனூர் மகிழ்ந்து கேட்டு மனத்தில் இருத்திக்கொள்வார்.

அன்றியும், பிள்ளை வயதினிலே அவர் தமக்கு ஒத்த வயதுடைய பிள்ளைகளைக் கூட்டி வைத்து அவர்களுக்கு அக்கதைகளை அழகாக எடுத்துரைப்பார். அது கேட்டு அவர்களுக்கு மகிழ்ச்சி உதிக்கும். அவ்விதம் கதை கூறிக் கருத்தைக் கவர்ந்த தனூல், அவரே அக்குழந்தைகளின் தலைவராய் விளங்கினூர்.

இளமையில் அவர் துடுக்கு நிறைந்த பிள்ளையாகவே துலங்கி, நாட்டு விளையாட்டுகளில் நல்ல தேர்ச்சியடைந்தார். சுவர்மீது விரைந்து நடப்பதிலும், பெரிய மரத்தில் ஏறுவதிலும், அவர் மிக்க திறமை உள்ளவர். அத்துடன் கவண் கொண்டும், கை கொண்டும், கல்லெறியப் பழகினூர்.

குதி வட்டு ஆடுதல், கோலி தெறித்தல், குதிரை மீது ஊர்தல், கோல் ஏறி நடத்தல், கால் மாறி ஓடுதல், நீரில் விளையாடுதல், கம்பு சுற்றுதல், கத்தி வாங்கி வீசுதல், மூச்சை அடக்கித் தலைகீழ் நடத்தல் முதலிய பற்பல விளையாட்டுகளிலும் அவர் வல்லவர் ஆனூர். வெடிகுண்டு சுடுதலிலும், வில் கொண்டு தெறித்தலிலும் அவர் ஓரளவு தேர்ச்சி கொண்டார்.

ஆறுவது வயதினில் அவரை ஒரு பள்ளியில் அமர்த்தினர். முறைப்படி அவர் அரிவரிச்சுவடி, ஆத்திச் சூடி, உலக நீதி முதலிய சிறு நூல்களை முழுவதும் கற்றுத்தேர்ந்தார்; அப்பால் ஆங்கிலமும் பயின்றூர். அது பற்றி அவர் தூத்துக்குடி செல்லை

நேர்ந்தது. ஆங்கிருந்த ஆங்கில கல்விச் சாலையில் அவர் சிறக்கக் கற்றுத் தவக்கம் இன்றிப் படிப் படியாக மேல் வகுப்பு எய்தி மேம்பாடு அடைந்தார்.

அதன்பின், அவர் திருச்சி மாநகர் சேர்ந்து, அங்கே சட்டப் பரீட்சைக்குப் படித்து வந்தார். அவரது மதிநலத்தை ஆசிரியர் கண்டு களித்து, உற்சாகம் ஊட்டினர். 1895-ஆம் ஆண்டு அவர் வக்கீல் பரீட்சையில் தேறி, அதற்குரிய பட்டமும் பெற்றார். அது கண்ட பெற்றோர் அடங்கா மகிழ்ச்சி அடைந்தனர்.

# 5. குரு பக்தி

**வா**னம் பொய்த்தாலும், வாரிதி வறண்டாலும், பெரியோரின் வாக்கு ஒரு நாளும் பொய்க்காது. அங்ஙனமே சிதம்பரனாரிடம் இளமையிலேயே இயற்கை நலங்களெல்லாம் மிளிரத் தொடங்கின; அறிவு, ஊக்கம், அஞ்சாமை முதலிய அருங்குணங்கள் கொழுந்து விட்டன.

இளம்பிள்ளைகளுள் தலைமை பூண்டு ஒழுகிய நாட்களில், அவர் அனைவரும் இன்புற வேடிக்கையும் வினோதமுமாகப் பேசுவார்; 'நல்லறிவு எல்லாச் சிறப்பும் தரும்,' என்று நவில்வார் அனைவரும் உடற்கட்டு மிகுந்து, ஆண்மையாளர்களாய் வளர்ந்து, சிங்கக் குட்டிகளாய் விளங்க வேண்டும் என்பார்.

தாய் தந்தையர் தின்பண்டம் கொடுப்பின், அதனைத் தோழர் அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்து உண்ணவே அவர் இச்சைப்படுவார்; பகிர்ந்து கொடுக்கும் போது அன்பு கலந்த இனிய

சொல்லே பேசுவார்; 'மருந்தேயாயினும் விருந்தோடு உண்ண வேண்டும்,' என்று இளைஞருக்கு எடுத்துரைப்பார்.

'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்,' என்பர் பெரியோர். எழுத்து வாசனை ஊட்டிய ஆசிரியரிடம் அவருக்கு அளவிறந்த பக்தி உண்டு. ஆசிரியரின் அருளை அடைதல் வேண்டும் என்பது அவர் கோட்பாடு. குருவின் அருளினால் அரிய ஞானமெல்லாம் அடைந்துவிடலாம் என்பதும் அவர் கொள்கை.

தமக்கு அறிவு புகட்டிய ஆசிரியர் அனைவரிடமும் அவர் பக்தி விசுவாசம் காட்டி நடந்து வந்தார். தமிழறிவு தந்த ஆசிரியரைக் குறித்து அவர் தமது சுயசரிதையில் பின் வருமாறு பாடியிருக்கிறார்

'விளைழயும்நல் தமிழினைப் பழையநல் முறையில்
விழைதர எனக்கு விளம்பிய ஆசான்,
மிகநலம் புரியும் வேளாண் குலத்தில்
தகவொடு தோன்றிய சான்றோன்; பெரியோ
வாய்மை என்பதே வாக்கினில் கொண்டோன்;
தூய்மை என்பதே தொடர்ந்த சிந்தையோன்,
ஒழுக்கம் பலவும் உடையாப் புனைந்தோன்;
இழுக்கம் ஒன்றே என்றும் இல்லோன்;
சாந்தம் பொறுமை தகுதிஎன்ற இவற்றின்
வேந்தன் என்ன விளம்பத் தக்கோன்;
விருந்தினர்க்கு என்றும் விரும்பி அளிப்போன்;
திருந்திய சொல்லும் செயலும் உடையோன்;
செந்தமிழ் நூல்எலாம் சிறக்கக் கற்றவை
தந்தமிழ்தா எனக்கொளச் சாற்றும் திறலோன்;
கருட தரிசனம் கண்டால் அல்லது
பருகான் நீரும் பத்துநாள் எனினும்;

வெண்ணீறும் மணியும் மேவப் பெற்ற
தண்ணிய அழகிய சரீரம் கொண்டோன் ;
வயதோ, நாற்பது வளரப் பெற்றோன் ;
பெயரோ, வீரப் பெருமாள் அண்ணலே ;
அன்னோன் சிறந்த அடியிணை சார்ந்து
பன்னாள் கேட்கும் பாக்கியம் பெற்றேன் !'

அத்தகைய ஆசிரியரிடம் அவர் தமது இளமையில் தமிழ் பயின்றதனால், முதுமையிலே தமிழ்வாணராய் ஒளி வீசலானார். ஆங்கிலம் அழகுறப் புகட்டிய ஆசானிடத்தும் அவர் மிக்க பத்தி பூண்டிருந்தார்.

## 6. ஏழைகளின் தோழர்

**வ**ழக்கறிஞர் எனப் பட்டம் பெற்றதும், சிதம்பரனார் சிறிது காலம் ஒட்டப்பிடாரத்திலேயே தொழிலை நடத்தி வந்தார். 'வாழ்க்கைக்கு வகை தேடுவது மட்டுமே தொழிலின் நோக்கம் அன்று ; பிறருக்குப் பயன்படுவதே முக்கிய நோக்கமாம்,' என்று அவர் கருத்தில் கொண்டார்.

அது பற்றி, வழக்காளர் பலரும் அவரிடம் விரும்பி வந்து, வழக்குகளை நடத்த வேண்டினர். ஒழுக்கமும் வாய்மையுமே உற்ற துணையென அவர் கருதியதனால், எல்லாருக்கும் அவரிடம் மதிப்பு மிகுந்தது. அதனால் வருமானமும் பெருகியது.

சிவில் வழக்குகளைவிடக் கிரிமினல் வழக்குகளிலேதான் அவரது தேர்ச்சியும் திறமையும் நன்கு விளங்கின. அத்துறையில் அவர் இளைஞராயினும், முதிர்ந்த வழக்கறிஞரெல்லாம் பொறாமை கொள்ளும் வண்ணம் திறம்படத் தொழிலை நடத்தி வந்தார்.

அவருக்கு ஏழை பாழைகளிடம் இயற்கையிலேயே இரக்கம் அதிகம். ஆதலின், வழக்கின்

சிக்கலேயும் நுட்பத்தையும் கவனித்துப் பணம் கேட்காமல், வழக்காளியின் நிலேமைக்குத் தக்க வாறே ஊதியம் கேட்பார். ஏழைகளுக்கு இனமாக அவர் வாதாடியதும் உண்டு.

அந்நாளிலே ஆங்கில ஆட்சியின் நிலேமை கண்டும், அதிகாரிகளின் பான்மை பார்த்தும், மக்க ளுட் பலரும் அஞ்சிக் கிடந்தனர். அந்நிலேயை நம் பாரதியார் வெகு நேர்த்தியாய் விளக்கியிருக் கிருர். அப்பாடல் பின் வருமாறு :

'சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் ;—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார் ;
துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டில் ஒளிப்பார் ;
அப்பால் எவனே செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந்து எழுந்துநிற்பார் ;
எப்போதும் கையைக் கட்டுவார் ;—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார்.'

அவ்விதம் நிலே கெட்ட மனிதரை நினைந்து சிதம்பரனுரின் நெஞ்சு பொறுக்கவில்லே. இவ்வள வுக்கும் போலீஸாரின் அட்டகாசமே காரணம் என்பதை அவர் கண்டுகொண்டார். ஆதலால், யார் மீதேனும் அவர்கள் பொய் வழக்குத் தொடுத் தால், அவர் எதிரிகளின் பக்கம் வாதாட முற்படு வார்; வருவாயைக் கவனியார்; நியாயம் ஒன் றையே நாட்டமாகக் கொள்வார்.

'உண்மை வாதி உலகினுக்கு விரோதி!' என்று ஒரு வசனம் உண்டு. ஊதியத்தையும் நாடாமல் உண்மைக்கே அவர் உழைத்தல் கண்டு, போலீஸா ருக்கு அவர்மீது ஆத்திரம் பிறந்தது. பிறக்கவே, அவர்மீதும் அவர்கள் பொய் வழக்குத் தொடுத்து அவரை மடக்கப் பார்த்தார்கள். ஆயினும், அம்

முயற்சிகள் பலிக்காமல் போயின. அவர்கள் அவருக்கு நஷ்ட ஈடு கொடுக்கவும் நேர்ந்தது.

நுண்ணறிவும் நூலறிவும் மிகுந்த சிதம்பரனார், நீதி மன்றத்திலே குறுக்கு விசாரணை செய்தல் பலருக்கும் பிரமிப்பை ஊட்டும்; போலீஸாருக்கோ, பயத்தை விளைக்கும் அவரது கட்சிக்காரருக்கோ, களிப்பை உண்டாக்கும்; நீதிபதிக்கோ, வியப்பை உண்டு பண்ணும்.

கைக்கூலி வாங்கும் அதிகாரிகளும், வல்லடி வழக்குப் பேசும் வீணர்களும், எதிர்ப்பக்கத்தில் சிதம்பரனார் வக்கீலாய் வந்தால், குலை நடுங்கு வார்கள்; தங்களது குற்றச் செயல்கள் அம்பலம் ஆதல் கண்டு அச்சம் மிகுந்து திருந்தி நடக்க முற் படுவார்கள்.

வழக்காளராய் வந்தவரிடம் அவர் மதுர மாகப் பேசுவார்; சொந்தக்காரரைப்போலச் சொல்லாடுவார்; கொடையும் குணமும் காட்டிக் குலாவுவார். அண்டம் கலங்கினாலும் அரைகுறை யாக வழக்கை இடையில் விடார்; எடுத்த கட்சிக்கு வெற்றி தேடித் தருவார்; எவருக்கும் இனியராய்த் துலங்குவார்.

அவ்விதம் வக்கீல் தொழிலை ஓர் உபகாரத் தொழிலெனவே மதித்து வந்தமையால், பெரு நிதியும் அவரிடம் திரண்டது. அதுகொண்டு அவர் வீடு அன்ன சத்திரமே போலத் துலங்கிற்று. இள மையிலேயே தமிழ்ப்பற்று மிகுந்தவர் ஆதலின், தமிழ்ப் புலவருக்கும், அறிஞருக்கும் தக்கவாறு அவர் உதவி புரிந்து வந்தார்.

வழக்காடும் உலகில் அவர் பெயர் ஒரு புறம் ஒளி வீசத் தமிழ் வாணரின் உலகிலும் அவர் புகழ் பரந்து நின்றது. அவரது மதியும் நிதியும் எல்லா ருக்கும் இனிது பயன்பட்டு வந்தன.

# 7. வழக்கறி வன்மை

மிகவும் பிரபலமான கொலை வழக்கு என்றால் சிதம்பரனாரின் புகழ் அச்சிமை எங்கும் பரவிற்று.

திருநெல்வேலிச் சீமையிலே குலசேகரநல்லூர் என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கே கொடிய துஷ்டனான ஆசாரியொருவன் பல பெண்களைக் கெடுத்து வந்தான். அது கண்டு ஊராருக்கு அவன்மீது கோபம் பொங்கியது. ஒரு நாள் சிலர் சேர்ந்து, அவனைத் துரத்தியடித்து, வேட்டையாடிக் கொலை செய்தனர்.

அவ்வழக்கில் ஏழுபேர் எதிரிகள். அவர்களுள் அறுவர் ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றெட்டாம் வருஷம் சிறைத்தண்டனை அடைந்தனர். முதல் எதிரியான அழகப்பப் பிள்ளை என்பவன், போனவிடம் தெரியவில்லை. ஆறுமுகத் தம்பிரான் என்பவரை ஆறாண்டு கழித்து, முதல் எதிரியென்று போலீசார் கைது செய்தனர்.

குறித்த கொலை நடந்தவுடன் அழகப்பப் பிள்ளை என்பவர் ஆறுமுகத் தம்பிரானாய்ச் சிதம்பரத்திலே ஒரு மடத்தின் தலைவர் ஆகிவிட்டார் என்பது போலீசின் வாதமாம். அத்தம்பிரானை ஓட்டப்பிடாரத்திலே சிறையில் வைத்திருந்தனர். அவர் சிதம்பரனாருக்கு உறவு முறை உள்ளவர். உற்றாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அத் தம்பிரான் பக்கம் சிதம்பரனார் வக்கீலாய் அமர்ந்தார்.

தம்பிரானை ஜாமீனில் விடுமாறு மாஜிஸ்திரேட்டினிடம் சிதம்பரனார் மன்றாடிப் பார்த்தார். கைக்கூலி கருதி அவரை ஜாமீனில் விடுவிக்க மாஜிஸ்திரேட்டு மறுத்துவிட்டார். அதன்மேல்

சிதம்பரனார் தூத்துக்குடியிலே உயர்நீதிபதியான வாலஸ் துரையிடம் அப்பீல் செய்துகொண்டார். அதனால், விடுதலை கிட்டியது.

பின்பு, அக்கொலை வழக்கு நெடுக நடந்து வந்தது. மிகவும் கீர்த்தி வாய்ந்த வக்கீல்கள் இருவர் வாதி பக்கம் அமர்ந்து வழக்கை நடத்தி வந்தனர். எதிரியின் பக்கம் சிதம்பரனார் ஒருவரே வழக்கறிஞர். அச்சிதம்பரனாரின் குறுக்கு விசாரணையில் வாதி பக்கத்துச் சாட்சிகள் அனைவரும் திணறிப் போயினர்; முன்னுக்குப்பின் முரணாகவும் விடை பகர்ந்தனர்.

போலீஸாரும் குறுக்கு விசாரணையில் நெஞ்சு உரப்புடன் பதில் சொல்ல முடியவில்லை. ஒன்றிருக்க ஒன்றைச் சொல்லி வந்தார்கள். வாலஸ் துரை அவ்வழக்கின் போக்கை நன்கு அறிந்து கொண்டு மகிழ்ந்து நின்றார். அச்சமயம் நீதி மன்றத்திலே போலீஸ் இலாக்காவின் உயர்தர அதிகாரியான ஓர் ஆங்கிலேயர் அவ்வழக்கை உற்று நோக்கி வந்தார்.

ஒரு நாள் விசாரணை முடிந்து எல்லாரும் நீதி மன்றத்தை விட்டு வெளியே வரும் சமயம் அந்த ஆங்கில அதிகாரி வலுவிலே சிதம்பரனாரை அணுகி, "உமது வாக்கு வன்மையையும், அஞ்சா நெஞ்சத்தையும், குறுக்கு விசாரணையின் நுணுக்கத்தையும் கண்டு வியந்தேன். உமக்கு எதிரான கிரிமினல் வழக்கறிஞர் இலர்!" என்று கூறிக் கையைப்பிடித்துக் குலுக்கித் தமது மட்டற்ற மகிழ்ச்சியை வெளியிட்டார்.

பின்பும் பல நாள் அவ்வழக்கு விசாரணை டந்து வந்தது. வாதியின் பக்கமே சாட்சிகள்

விசாரிக்கப் பெற்றனர். எதிரி பக்கம் சாட்சி விசாரணை நடவாமலே, வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. தம்பிரானும் உடனே விடுதலை அடைந்தார். அந்தக் கொலை வழக்கின் முடிவைக் கண்டு சிதம்பரனாரின் பேரும் புகழும் பெரிதும் பரவின. வாலஸ் துரையும் சிதம்பரனாரின் திறமையை வியந்து பேசினார்.

'அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.'

என்னும் திருக்குறளினுக்கு நம் சிதம்பரனார், ஓர் எடுத்துக்காட்டு ஆவார். ஆவதை அறிந்து அவர் வாதித்தார்; அரிய புகழும் அடைந்தார். அவருக்கு அத்தம்பிரான் என்ன கைம்மாறு செய்வார்! சிதம்பரத்திலே தமது மடத்தில் அவருக்குப் பெருவிருந்து ஒன்று நடத்தி நன்றி செலுத்தினார்.

அரச நிந்தனை வழக்கில் கொடிய தண்டனை அடைந்து அதன் பின் விடுதலை அடைந்ததும் மீண்டும் வக்கிலாக வேலை பார்க்க விரும்பினார் சிதம்பரனார். அதற்காக அவர் சென்னை உயர்நீதி மன்றத்திலே விண்ணப்பம் செய்துகொண்டார். அப்போது அதே வாலஸ் துரை அவ்விண்ணப்பத்தை ஏற்று, அன்புடன் ஆதரித்தார். அதனால், சிதம்பரனார் மீண்டும் அத்தொழிலில் புக முடிந்தது.

அந்நன்றியறிவைப் புலப்படுத்த விரும்பிய சிதம்பரனார் தம் குமாரருள் ஒருவருக்கு வாலீசுவரன் என்று பெயரிட்டார்.

## 8. வள்ளியம்மையார்

உத்தமராயிருக்கவும் உற்றூர் பெற்றூருக்கு உதவவும், ஊருக்கு உழைக்கவுமே மனிதர் பிறப்பு எய்துகின்றனர். ஆடவர் அப்பிறப்பின் பயனை அடைய வேண்டின், அன்னருக்கு ஒரு துணை வேண்டும். அத்துணையை வாழ்க்கைத்துணை, அதாவது மனைவி என்பர் பெரியோர்.

ஆனதனால், சிதம்பரனாரின் தந்தையார் அவருக்குத் திருச்செந்தூர்ச் சுப்பிரமணியப் பிள்ளையின் குமாரத்தியாரான **வள்ளியம்மையார்** என்னும் நல்லாரைக் கடிமணம் செய்துவைத்தார். கணவர் மனைவியர் இருவரும் பூவும் மணமும் போல பொருந்தி வாழ்ந்து வந்தனர்.

'மங்கலம் என்ப மனைமாட்சி,' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். அவ்விதம் விளங்கிவந்த பெருமை அந்த அம்மையாரைச் சாரும். அத்தேவியாரின் அருங்குணத்தைக் குறித்து நம் சிதம்பரனார் பாடி வைத்திருப்பது இது :

'எனதொரு வடிவமும் எனக்குஉறு தொண்டுமே
கனவினும் நனவினும் கண்டுஅவள் நின்றனள் ;
என்னைப் பெற்றோர் என்னொடு பிறந்தோர்
என்னை நட்டோர் யாவரும் தன்னுடை
உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிர்இலா மனத்தள் ; தெய்வமே அனையள்.'

அந்த அம்மையாரின் குணநலங்கள் அவ்வாறு இருக்க, தமிழறிவு எத்தகையது என்பதைப் பார்ப்போம். சிதம்பரனார் செப்பும் வண்ணம்,

'வள்ளுவர் குறளை வளன்உறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்.'

கண் இரண்டும் இல்லாத ஞானியர் ஒருவரை அவர் தமது மனையகத்தே வைத்துக் காப்பாற்றி வந்தார். அந்த ஞானியர் குருடர் ஆதலின், அவருக்கு அந்த அம்மையார் அமுது ஊட்டுவது வழக்கம். ஊரார் அதனை அறிந்து, 'இழிகுலத் தானை வீட்டில் வைத்து அமுது ஊட்டி வருதல் அழகோ ?' என்று பேசினர்.

சிதம்பரனார் அப்பழிச் சொல்லைத் தம் வாழ்க்கைத் துணைவியாரிடம் உரைத்தார். அத் தேவியார், "இலங்கும் உடல், உயிர் அனைத்தும் ஈசன் கோயில். அங்ஙனம் இருக்க, அறியாது பேசும் பேதையரின் வார்த்தையை நாம் மதித்து மாழ்குவதேன் ?" என்று விடை தந்தனர். அது கேட்டு அவர் அகம் மிக மகிழ்ந்தார்.

'தாரமும் குருவும் தலை விதி,' என்பர். நல் வினையின் விளைவாகவே நல்ல மனைவி வாய்ப்பள். அவ்விதம் சிதம்பரனாருக்கு வாழ்க்கைத் துணைவி யராய் வாய்த்த வள்ளியம்மையாரை அவர் ஓரிடத் தில் 'மகராசி' என்று மகிழ்ந்து மொழிந்துள்ளார்.

தமிழிலே வேதம் பாடிய திருவள்ளுவரும் தம் தேவியாரான வாசுகியார் காலகதியானவுடன் கண் கலங்கினர் என்று நூல்கள் கூறும். நம் சிதம் பரனர் அதற்கு விலக்காக இருக்க ஒண்ணுமோ ? 1901-ஆம் ஆண்டில் அத்தேவியார் காலகதி எய்தி னர். அப்போது சிதம்பரனர் இரங்கிப் பாடிய பாடல்கள் இவை

'இல்லத்தில் ஒன்றுமே இல்லைஎன்னாள் ; எக்காலு
நல்லுணவு தான்சமைத்து நல்குவாள் ;—அல்லல்
[ஒழித்து
இன்புறவே செய்திடுவாள் எப்பணியும் உள்ளமுடன்
அன்புமிகு நல்லாள் அமைந்து.

* *

'என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்
என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான்—
தன்னுடைய
பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்
கற்றோரும் உள்உவக்கக் கண்டு.'

அப்பால் அந்த அம்மையாரின் குடும்பத்திலேயே திருமதி மீனாட்சி என்னும் மங்கை நல்லாரை அவர் மணந்துகொண்டார்.

## 9. தமிழ் ஆராய்ச்சி

இளமையிலேயே சிதம்பரனார் தமிழ் நூல்களைக் கற்று அறிந்தார் அல்லவா? வழக்கறிஞராய் அமர்ந்த காலத்திலும் தமிழ்ப்பற்று அவரிடம் குன்றவில்லை; பெருகியே வந்தது. ஆதலின், தமிழ் ஆராய்ச்சியில் அவரது சிந்தை குவிந்தது; சைவ சமயத்திலும் ஊக்கம் முதிர்ந்தது.

'பரமசிவனே பரம்பொருள்,' என்று சைவ சமயம் போதிக்கும். அச்சமய நூல்கள் பலவற்றையும் அவர் ஆராய்ச்சி செய்து வந்தார். அப்போது **வள்ளி நாயகம்** என்னும் சித்தாந்த வித்துவான் அவருக்குத் துணை புரிந்தார்; சித்தாந்த உண்மைகளையும் புகட்டினார்.

தெய்வத் தமிழ்மறை எனப்படும் திருக்குறளை அவர் ஆவலுடன் படித்து, ஆராய்ச்சியும் செய்து வந்தார். அது சமயம் சிறந்த தமிழ்ப் பண்டிதரும் அவரது ஆராய்ச்சித் திறங்கண்டு மெச்சிப் பேசினர். மதுரத் தமிழின் வளங்கண்டு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அவர் சேரலானார். சேர்ந்ததும் பற்பல தமிழ்ப் பண்டிதரின் கூட்டுறவும் நட்பும் அவருக்கு வாய்த்தன.

பின்பு சிதம்பரனாரும் வள்ளி நாயகமும் சேர்ந்து, மக்களிடையே தமிழறிவையும் ஞான நெறியையும் பரப்ப, விவேக பானு என்னும் பத்திரிகையை நடத்தி வந்தனர். அவ்வப்போது சிதம்பரனார் பல பல செய்யுட்களை இயற்றுவார். அவை அப்பத்திரிகையில் வெளி வரும். அவற்றின் சொற்சுவையும், பொருட்சுவையும் பார்த்துப் பெரும் பண்டிதரும் புகழ்ந்து பேசுவர்.

அந்நாளில் அவர் ஏனைய தமிழ் நூல்களையும் ஆர்வத்துடன் படிக்கத் தொடங்கினார் தமிழிலே சிறந்த காவியங்களான சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களைப் படித்து இன்புற்றார். தொல்காப்பியம் என்னும் சிறந்த இலக்கணத்தையும் அவர் ஆழ்ந்து படித்து வந்தார்; அரிய பண்டிதர்களையடுத்து அந்நூலில் கண்டுள்ள நுணுகிய பொருள்களையும் உணர்ந்துகொண்டார்.

அன்று அங்கே நிலவிய வாலிபர் சங்கம், பிரமஞான சங்கம் முதலிய பல சங்கங்களில் சிதம்பரனார் சேர்ந்து பெரியார்களின் சொற்பொழிவுகளைச் செவி மடுத்து வந்தார்; தாமும் சொற்பொழிவு செய்து, 'அரிய பிரசங்கி' என்ற பெயரும் அடைந்தார்.

தினசரிப் பத்திரிகைகளை நாள்தோறும் அவர் நயந்து நோக்குவார்; அவற்றிலுள்ள செய்திகளைச் சீர்தூக்கி உணர்ந்துகொள்வார்; அவற்றைப் பிறருக்கும் எடுத்துரைத்துப் பலன் காட்டுவார். தாம் கண்ட இன்பம், பிறரும் காண வேண்டும் என்பதே அவர் நோக்கமாம்.

சிந்தைக்கும் செவிக்கும் இனிய உணவு தேடும் சமயத்தில் வயிற்றுக்கு உரிய உணவை அவர்

மறந்துவிடுதலும் உண்டு. அவ்விதம் அறிவு வளர்ச்சியிலும், தமிழ் ஆராய்ச்சியிலும், சமய சிந்தனையிலும் அவரது காலம் கழிந்து வரும். வருங்கையில் தெய்வப் பற்றும், தேசபற்றும் அவரிடம் வளர்ந்தோங்கி வரலாயின.

ஒரொரு சமயம், 'உலக வாழ்வு துறந்து, துறவறத்தில் புகுந்துவிடலாம்!' என்று அவர் துடித்து நின்றது உண்டு. துறவறத்தில் அவர் புகாவிடினும் துறவுள்ளம் அவரிடம் குடி கொண்டது. கடைநாள் வரையில் அந்த உள்ளமே அவருக்கு உற்ற துணையாய்த் துலங்கி நின்றது.

## 10. சுதேசியக் கிளர்ச்சி

ஆதியிலே நமது தேசத்திலே அரசியல் கிளர்ச்சியில் முன்னின்றோர் வங்காளியர். அவர்களின் தேசப்பற்றும், செயலாற்றும் திறனும் ஆங்கில அதிகாரிகளுக்கு அச்சத்தை விளைத்தன. அவ்வேளை இத்தேசத்திலே ஆங்கில அரசப் பிரதிநிதியாய் இருந்தவர் லார்டு கர்ஸன் என்பவர்.

வங்காளியரின் ஒருமை உணர்ச்சியையும் ஊக்கத்தையும் அடக்க, வங்காளத்தை அவர் இரு துண்டு ஆக்கினர். ஒன்று ஹிந்து வங்காளம்; மற்றொன்று முகம்மதியரே அதிகமான முகம்மதிய வங்காளம். அப்பிரிவினையைப் போக்க வேண்டி அவ்வங்காளியர் வெகுண்டெழுந்து, பெருங் கிளர்ச்சி செய்தனர். அப்போது சுதேசிய இயக்கம் தோன்றியது.

அந்நாளில் ஆங்கில சீமைத்துணிகளே இங்கு நிரம்பியிருந்தன. அவற்றையே அனைவரும் விரும்பி

வாங்கிக் கட்டி வந்தனர். அதனுல், கோடிக்கணக்காக நமது தேசச் செல்வம் இங்கிலாந்துக்குச் சென்று வந்தது. இங்கே நமது நெசவுத் தொழிலும் மறையத் தொடங்கிற்று.

வங்காளியர் அதுகண்டு, 'அன்னிய தேச ஆடைகளை அறவே ஒழிக்க வேண்டும்; சுதேச ஆடைகளையே எல்லாரும் வாங்கி உடுக்க வேண்டும்; இயன்ற வரையில் நாட்டுச் சாமான்களையே கையாள வேண்டும்' என்னும், சுதேசி இயக்கத்தைத் தோற்றுவித்தனர். அந்த இயக்கம் காட்டுத் தீப்போல எங்கும் வானுர பரவிற்று.

அந்த இயக்கத்தினுக்கு மூலமந்திரமாயும் வீர வாசகமாயும் விளங்கியது **வந்தே மாதரம்** என்னும் கோஷம். அவ்விதம் இருந்தும், அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்னும் பழமொழி பொய்யாமோ?

ஆதலின், வந்தே மாதரம் என்று வாய் திறக்கக் கூடாது. வாய் திறந்தால் அடியும் உதையும் கிட்டும் என்று சில்லரை அதிகாரிகள் ஆணை பிறப்பித்தார்கள். அவ்வாறே தண்டனையும் கொடுத்து வந்தார்கள். ஆனுலும், வந்தே மாதரம் என்னும் கோஷம் வங்காளத்திலே ஓங்கியது.

அந்த இயக்கமும் வாசகமும் சிதம்பரனுரின் உள்ளத்தைக் கவர்ந்தன. அதனுல், அவர் தரும சங்கம் என்னும் சங்கமொன்று நிறுவினுர்; சுதேசிய பண்டசாலை ஒன்றும் அமைத்தார்; காங்கிரஸ் இயக்கத்திலும் ஊக்கங்கொண்டு உழைத்தார்; கிராமந்தோறும் சென்று சுதேசியப் பிரசங்கம் செய்தார்.

அவ்விதம் அவர் செய்து வரவே, ஊர் தோறும் தெருச்சுவர்களிலே 'வந்தே மாதரம்', 'வாழ்க சுதேசியம்!' என்னும் வாசகங்கள் கொட்டை கொட்டையான எழுத்துக்களில் காணப் பட்டன. அதுகண்டு திருநெல்வேலிச் சீமை அதி காரிகள் திகைத்தார்கள்; தேம்பினார்கள்; சிந்தையும் திரிந்தார்கள்.

அந்நிலையில் வங்காள ராமகிருஷ்ண மடத் தைச் சேர்ந்த அபேதானந்தர், பிரமானந்தர் என்னும் துறவியரின் பழக்கம் சிதம்பரனாருக்குக் கிட்டியது. அவரது அரிய முயற்சிகளை அவ்விரு துறவியரும் வாழ்த்திப் போற்றினார்; மக்களுக்கு நல்வாழ்வளிக் கும் வகை துறை தேடுமாறு அவருக்கு வலியுறுத் தினர்.

அதனால் சிதம்பரனாரின் சிந்தையும், செயலும், தோற்றமும், நடையும் சுதேசிய மயமாகவே துலங் கின. மக்களும் அவருக்குப் பக்கபலமானார்கள்.

## 11. திலக தாஸர்

சுதேசிய இயக்கக் காலத்தில் நமது அரசியல் துறையிலே முன்னணியில் நின்ற மாபெருந் தலைவர் லோகமானிய பாலகங்காதர திலகர். மகாத் துமா காந்தியை நாம் 'தேச பிதா' என்று வழங்கி னால், அத்திலகரைச் 'சுயராஜ்ய பிதா' என்று வழங்குதல் வேண்டும்.

சுயராஜ்யம் என்று வாயினால் சொல்லவும் பிற தலைவர்கள் அஞ்சி நின்ற காலத்திலே, 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை!' என்று சிங்கநாதம் செய்த

வர் பால கங்காதர திலகரேயாவர். அத்திலகரின் சொல்லிலும் செயலிலும் வீரக்கனல் ததும்பும். சுதந்தர ஆவேசம் மிளிரும்.

வீரரை வீரரே காமுறுவர் என்பது இயற்கை. வீர சிதம்பரனார் அவ்வீர திலகரின் சொல்லிலும் செயலிலும் ஈடுபாடு மிகுந்தார்; இரண்டையும் எல்லாருக்கும் எடுத்து உரைத்தார்; எங்கும் சுய ராஜ்ய கோஷத்தைப் பரப்பினார்; சுதந்தர ஆவேசத்தை எழுப்பினார். அது கண்டு திலகதாஸர், குட்டித் திலகர், தென்னாட்டுத் திலகர் என்று எல்லாரும் சிதம்பரனாரை அருமையாக வழங்கி வந்தனர்.

அத்திலகரே சிதம்பரனாரின் அரசியல் குரு ஆனார். அக்காலத்தில் திலகரின் அரசியல் துணைவர்களாய்த் துலங்கியவர்கள் அரவிந்த கோஷ், விபின சந்திர பாலர், லாலா லஜபதிராய் என்பவர்கள். இவர்களிடமும் சிதம்பரனாருக்குப் பற்று மிகுந்தது.

சிதம்பரனார் மிகவும் திறமையான பேச்சாளர், தமிழகத்திலே பொதுக்கூட்டம் கூட்டிப் பேசும் முறையைப் பிரபலம் செய்தவர் அவரே. அவரது பேச்சு என்றால், அனைவரும் அண்ணாந்து கேட்பர்; அழகு அழகு என்பர்; ஆனந்த பரவசமும் அடைவர். அப்பெருந்தலைவர்களின் சீரிய உரைகளையெல்லாம் தமிழகத்திலே நம் சிதம்பரனார் ஊர்தோறும் பரப்பி வந்தார்.

1907-ஆம் ஆண்டிலே சூரத்து நகரில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்குச் சிதம்பரனார் சென்றிருந்தார். அப்போது அவருக்குச் சகாக்களாகச் சென்னை வக்கீல் துரைசாமி ஐயர், கவி சுப்பிர

மணிய பாரதியார், வி. சர்க்கரை செட்டியார் முதலிய பலர் உடன் சென்றனர்.

அம்மகா சபையிலே மிதவாதிகள் என்றும், தீவிர வாதிகள் என்றும், காங்கிரஸ்காரருள் இரண்டு பிரிவுகள் உதித்தன. அச்சமயம் அங்கே சமரச ஏற்பாடு ஒன்று உண்டாகியது. அதன்படி தென்னாட்டு மிதவாதிகளின் தனிப்பிரதிநிதியாகக் காலஞ்சென்ற சென்னைச் செல்வர் வி. கிருஷ்ண சாமி அய்யர் நியமனம் ஆனார். தீவிர தேச பக்தரின் கூட்டத்திற்கு நம் சிதம்பரனாரே பிரதிநிதி என்றால், அவருக்கு அந்நாளில் ஓங்கியிருந்த செல்வாக்கை யும் மதிப்பையும் கண்டுகொள்ளலாம்.

தூத்துக்குடியிலே சிதம்பரனார் நிறுவிய தரும சங்கமும், சுதேசியப் பண்டசாலையும் வளர்ப்பிறை போல நாளும் வளர்ந்து வந்தன. மக்களுட் பலரும் அவற்றை உள்ளன்புடன் ஆதரித்து வந்தனர். அதனால், அந்நகரிலும் திருநெல்வேலிச் சீமையிலும் அன்னியத் துணி விலக்கு மும்முரமாய் நடந்து வந்தது. சீமைத் துணிகள் ஆங்காங்கே மலை மலை யாகக் குவிக்கப்பெற்றுத் தீ வைக்கப்பட்டன. பலரும் நாட்டு ஜவுளிகளையே நன்கு ஆதரித்து வந்தனர்.

அதனால், சீமைத்துணி வியாபாரம் வரவர ஒடுங்கியது. அது கண்டு அன்னியத் துணி வர்த்த கரும் ஆங்கில அதிகாரிகளும் அச்சம் பூத்து நின்றார்கள்.

# 12. நாவாய்ச் சங்கம்

முன்னம், நம்மவர் கப்பல் மூலம் கடல் பலவும் கடந்து வர்த்தகம் புரிந்து வந்தனர். அன்றியும் சண்டைக் கப்பல் படையுங்கொண்டு சிறந்து விளங்கினர்; கப்பல் கட்டும் தொழிலினும் வல்லவராய் இருந்தனர். அன்று அவர்கள் ஏருத தீவும் தேசமும் இல்லை.

அத்தகைய நம்மவர் ஆங்கில ஆட்சியின் காலத்திலே, கப்பல் கட்டும் தொழிலை மறந்தனர்; கப்பல் வியாபாரத்தை இழந்தனர்; கப்பற் போரும் அவர்களுக்கு ஒரு கனவாயிற்று. தங்களது சரக்குகளை அனுப்ப ஆங்கில வர்த்தகரையே நாடி நிற்கவும் நேர்ந்தது.

சிதம்பரனர் வக்கீல் தொழில் புரிந்து வந்த தூத்துக்குடி, தமிழ் நாட்டின் தென்கோடியில் உள்ள ஒரு துறைமுகப்பட்டினம். தமிழகத்திலிருந்து இலங்கைத் தீவுக்குச் செல்லும் பிரயாணிகளும் சரக்குகளும் அக்காலத்திலே தூத்துக்குடி வழியாகவே கப்பலில் ஏறிப் போக வேண்டும். எனவே, அப்பட்டினம் ஒரு பெரிய வர்த்தக ஸ்தலமாய் விளங்கியது. தென்னுட்டுச் சரக்குகளை இலங்கைக்கு அனுப்பும் வணிகர் அங்கே அதிகமாய் இருந்தனர்.

அன்று, 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன்' கம்பெனி'யாரின் கப்பல்களே தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையே போய் வந்தன. அவர்கள் ஆங்கில வர்த்தகருக்கே அதிகச் சலுகை காட்டி வந்தார்கள். அதனல் இந்திய வணிகருக்கு மிக்க கஷ்டமும் நஷ்டமும் நேர்ந்தன.

அதன்மேல் இந்திய வணிகர் நம் சிதம்பரனாரை அடைந்து தம் குறைகளைக்கூறி முறையிட்டுக்கொண்டார்கள். அதனால், சுதேசியக் கப்பல் கம்பெனியொன்றைத் தொடங்க வேண்டுமென்று அவர் முடிவு செய்தார். அதற்கு நமது தென்னாட்டு வர்த்தகர், செல்வர், தேசபக்தர் முதலிய அனைவரும் ஆதரவாய் இருந்தனர்.

அவர்கள் ஆதரவால் கப்பல் கம்பெனியை அவர் தோற்றுவித்தார். பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்து லட்சம் ரூபாய் மூலதனத்துடன் 1906-ஆம் ஆண்டு அக்கம்பெனி உதித்தது. சிறிய வக்கீலாயிருந்த அவரது முயற்சியை அனைவரும் பாராட்டினர்.

மதுரையிலுள்ள பாலவனத்தம் ஜமீந்தாரும் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவருமான பாண்டித் துரைத் தேவர் என்பார், அக்கம்பெனியின் தலைவர் ஆனார். தூத்துக்குடியில் உள்ள பெருஞ்செல்வரான சீனா குடும்பத்தாரும் மிக்க ஆதரவு தந்தனர். சிதம்பரனாரே அக்கம்பெனியின் செயலாளராய் அமர்ந்தார்.

சுதேசிய இயக்கமும், வந்தே மாதர முழக்கமும், சுதந்தர ஆவேசமும் தலை தூக்கி நின்ற அக்காலத்தில் தமிழ்மக்கள் மட்டுமேயன்றி, நமது தேசத்தின் பற்பல பகுதிகளில் உள்ள மக்களும் அலைகடலுக்கப்பால் தொலை நாடுகளில் வாழும் இந்திய மக்களும், அக்கப்பல் கம்பெனிக்குப் பண உதவி செய்தார்கள். சிதம்பரனாரின் தனி முயற்சியால் தோன்றிய அக்கம்பெனியிடம் பலருக்கும் பற்று மிகுந்தது. ஏழை எளியவரும் தம்மால் ஆனதை உதவி வந்தனர்.

அவ்விதம் நம்மவர் அனைவரும் அக்கம்பெனியிடம் பற்று வைக்க, அன்றளவும் கப்பல் வியாபாரத்தில் தனியரசு கொண்டிருந்த ஆங்கிலக் கம்பெனிக்குக் கோபமும் குரோதமுமே பெருகின. அதன் விளைவை அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

## 13. போட்டியும் சூழ்ச்சியும்

லாவோ, காலியா என்னும் இரண்டு கப்பல்களைச் சுதேசியக் கம்பெனி நடத்தி வந்தது. இந்திய வர்த்தகர் அனைவரும் அக்கப்பல்களையே ஆதரிக்க முற்பட்டனர். இந்தியப் பிரயாணிகளும் அவற்றில் ஏறிச்செல்லவே விரும்பினார்கள்.

இங்கிலையில் ஆங்கிலக் கம்பெனியின் கப்பல்களில் பிரயாணிகளும் சரக்குகளும் ஏறிச்செல்லுதல் மிகவும் குறைந்துவிட்டது. அதன்மேல் பொய்யும் புரட்டும்கூறி, இந்தியக் கம்பெனியை ஆங்கிலக் கம்பெனியார் இழிவு படுத்தி வந்தனர். இச் சூழ்ச்சி பலிக்கவில்லை.

அப்பால் கட்டணத்தைக் குறைத்துப் போட்டி போட ஆங்கிலக் கம்பெனி முயன்றது. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் அன்று மூன்றாவது வகுப்புக் கட்டணம் ஐந்து ரூபாயாக இருந்தது; அதனை முக்கால் ரூபாயாக அந்த அந்நியக் கம்பெனி இறக்கியது. பின்பு கட்டணமே வாங்காமல் இலவசமாகக்கூட ஆட்களை ஏற்றிச் செல்லவும் அது கருதியது.

அவ்விதம் கடும்போட்டி ஏற்பட்டும் சுதேசியக் கம்பெனி சிறிதும் சளைக்கவில்லை. தைரியமாகவே

வேலை செய்து வந்தது. சிதம்பரனாரும் ஆங்கிலக் கம்பெனியின் சூழ்ச்சியையும் போட்டியையும் அம்பலமாக்கி ஆண்மை காட்டி வந்தார்.

'இனம் இனத்தைக் காக்கும்,' என்னும் மொழிக்கு இணங்க, ஆங்கில அதிகாரிகள் அந்த ஆங்கிலக் கம்பெனிக்கே ஆதரவெல்லாம் தந்து கின்றனர். முடிவில் சிதம்பரனாரைக் கலைத்துவிட வும் ஒரு சூழ்ச்சி கையாளப்பட்டது. அதன் விவரம் இது:

ஒருநாள் இரவு பத்துமணி இருக்கும். கம்பெனி யின் கடிதப் போக்கு வரவுகளை யெல்லாம் பார்த்து விட்டு, நம் சிதம்பரனார் உறங்கப்போகும் சமயம் இருவர் வந்து, வாயில் கதவைத் தட்டினர். யாரோ நேசர் வந்துளர் என்ற ஆவலுடன் சிதம்பரனார் கதவைத்திறந்தார்.

ஓர் ஐரோப்பியரும் ஓர் இந்தியருமாக இருவர் தோன்றினர். இருவரும் சிதம்பரனாருக்கு வேற்று முகம். அவ்விருவரையும் அவர் முகமலர்ச்சியுடன் வரவேற்று, உள்ளே அழைத்துச்சென்று பாலும் பழமும் கொடுத்து உபசரித்தார்; பின்பு, வந்த காரியம் யாதென வினவினார்.

இருவரும் முதலில் ஏதேதோ பேசினர்; முடி விலே ஆங்கிலக் கம்பெனியின் மட்டற்ற மூலதனத் தையும் அளவில்லாத செல்வாக்கையும் விரித்து உரைத்தனர்; 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாமோ?' என்று நயமாகப் பேசினர்; 'ஆகாத காரியத்தில் தலையிட்டுப் பெரிய குடும்பத் தின் நலத்தைப் பறக்க விடுவதோ!' என்று பரிந்து பகர்ந்தனர்.

'மிகப் பெரிய மலையே ஆனாலும், சிற்றுளியால் அதனைத் தகர்த்துவிடலாம்,' என்று சிதம்பரனுர் பதிலுரைத்தார். நயமும் பயமும் காட்டி, அச்சிதம்பரனுரைக் கலக்க முடியாது என்று அவ்விருவருக்கும் தோன்றியது. அதனுல், இலட்சக்கணக்கில் பணத்தை எடுத்து அவர் முன்னே வைத்தனர்.

வைத்ததும், "ஐயா, சுதேசியக் கப்பல் கம்பெனியின் செயலாளராய் இருப்பதில் வக்கீல் தொழிலின் வருமானம் குறைந்து போகின்றது. வரவர உங்கள் குடும்பமோ பெரிதாகின்றது. தனக்கு மிஞ்சியல்லவோ தானதருமம்? இதனை எண்ணிப் பாருங்கள். ஊர் சுகப்பட வேண்டி நீர் ஓட்டாண்டியாவதோ? இப்பெருநிதியை ஏற்று அக்கம்பெனியின் செயலாளர் பதவியிலிருந்து நீவிர் நீங்கினுல் போதும். இதுவே எங்கள் விருப்பம்; வேண்டுகோளுமாம்," என்று பலபட உரைத்தனர்.

அது கேட்டதும், சிதம்பரனுரின் இரு கண்களும் சிவந்தன. பெருமூச்சு எழும்பியது. அவ்விருவரையும் அவர் உருத்து உற்று நோக்கினுர். "என் தாய்க்கா வஞ்சனை புரிவேன்? இந்நிதி எம்மாத்திரம்? எனது மானமும் தேசத்தின் மானமுமே சிறந்தன. விலை கொடுத்து இச் சிதம்பரத்தை வாங்க முடியாது," என்று அடக்கமுடன் அழுத்தமாக உரைத்தார்.

இருவரும் வாயிழந்து தம் மதியிழந்து வந்த வழியே திரும்பினர்; திரும்புங்கால், 'இவரைக் கசக்கிப் பிழிய வேண்டும்,' என்று சிந்தனை செய்து கொண்டே போயினர்.

# 14. சர்க்கார் சீற்றம்

சுதேசியக் கப்பல் கம்பெனி நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்தது. இந்திய வணிகர் பலரும் அதனைப் பெரிதும் ஆதரிக்க முற்பட்டனர். அது கண்டு அதிகாரிகளுக்குச் சினம் பொங்கியது; பகையும் மூண்டது. ஆதலின், சிதம்பரனாரைச் சிதைக்க நினைத்து, அவரது சொல் செயல் இரண்டையும் கூர்ந்து குறித்து வந்தனர்.

திருநெல்வேலியிலே மாகாண அரசியல் மகாநாடு கூடியது. அதில் அவர் அழுத்தம் திருத்தமாகப் பேசினார்; சுதந்தர தாகத்தை எழுப்பினார்; கப்பல் கம்பெனிக்குப் பங்கு சேர்க்கப் போகுமிடமெல்லாம் அவர் பற்பல சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்.

வடக்கே காசி முதல் தெற்கே குமரி வரையில் அவரது வீரவாசகத்தைச் செவி மடுக்காத முக்கிய நகரம் இல்லை என்னலாம். பங்கு சேர்க்கும் பொழுது அரசியல் நிலையை அவர் கண்டித்துக் கூறுவார். அந்த உரைகள் பலவற்றிலும் கனல் பொறி பறக்கும்.

அவற்றையெல்லாம் அதிகாரிகள் வகுத்தும் தொகுத்தும் வரைந்து, மாகாணச் சர்க்காருக்கு அவ்வப்போது அறிவித்து வந்தனர். அந்நாளில் திருநெல்வேலியிலே கலெக்டராய் இருந்த, விஞ்சு என்பார் சிதம்பரனாரின்மீது சீற்றம் மிகுந்தார்; அவரை வரவழைத்து, அடிக்கடி நயமும் பயமும் காட்டி உரை பகர்ந்தார்.

அந்த விவரத்தை நம் தேசீயக் கவிராயர் சுப்பிரமணிய பாரதியார் வெகு விளக்கமாக ஏழு

பாடல்களில் உரைத்திருக்கிறார். அவற்றில் இரண்டு இவை :

'நாட்டில் எங்கும் சுதந்தர வாஞ்சையை
நாட்டினாய், கனல் மூட்டினாய் :
வாட்டி உன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன் வலி காட்டுவேன் !
'எங்கும் இந்தச் சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய் விதை தூவினாய் ;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ நீங்கள் உய்யவோ !'

உள்ள நிலையைப் படம் போலப் பிடித்துச் சொல்லில் அமைத்துக் காட்டுவது புலவரின் தொழில். அந்த விஞ்சு துரைக்கு ஏற்றவாறு பதில் கொடுக்க நம் சிதம்பரனார் தவறவில்லை. அந்தப் பதிலையும் ஏழு பாடல்களில் அக்கவிஞர் சித்திரித்து இருக்கிறார். அவற்றில் இரண்டு இவை

'சொந்த நாட்டில் பரர்க்கு அடிமைசெய்தே
துஞ்சிடோம் இனி அஞ்சிடோம் !
எந்த நாட்டிலும் இந்த அநீதிகள்
ஏற்குமோ, தெய்வம் பார்க்குமோ ?'
'ஒற்றுமைவழி ஒன்றே வழிஎன்பது
ஓர்ந்திட்டோம் நன்கு தேர்ந்திட்டோம் !
மற்றும் நீங்கள் செய்யும்கொடுமைக்குஎலாம்
மலைவுறோம் சித்தம் கலைவுறோம் !'

'எடுத்த காரியத்தை இனிது முடித்தல் வேண்டும் ; இடையிலே வருவது வருக !' என்றே சிதம்பரனார் உறுதியுடன் இருந்தார். அவர் பெயரும் புகழும் எங்கும் பரவின. அவர் எங்கே போனாலும், "சிதம்பரம் பிள்ளைக்கு ஜே !" என்னும் கோஷம் வானை அளாவியது. அதனால் அதிகாரிகளுக்கோ அசூயை பொங்கி வழியலாயிற்று.

# 15. நம்மவரின் அநீதிகள்

உருவிலும் திருவிலும் பெரியோரெல்லாம் உண்மையில் பெரியோர் ஆகார்; செய்வதற்கு அரிய செயல் புரிவோரே பெரியோர் ஆவர். சிதம்பரனார் செய்த செயற்கரிய செயல் கப்பலோட்டியதேயாம்; அடுத்தபடி சுயராஜ்ய ஆசையை எழுப்பியது.

அவ்விரண்டின் விளைவாக இவர் கீர்த்தி எத்திக்கும் பரவியது. கப்பல் கம்பெனிக்குப் பொருள் கொடுத்து உதவினோருட் சிலர் அது கண்டு பொறாமை மிகுந்தனர்; மேலும், "நம்மைவிட எளியன்! நம்மினும் சிறியன்! இவனுக்கு இவ்வளவு புகழா!" என்று பொச்சாப்பு மிகுந்தனர்.

சிதம்பரனார் அது அறிந்து சுதேசிய பண்ட சாலையை வேறு ஒருவரிடம் ஒப்படைத்தார் கப்பல் கம்பெனியின் செயலாளர் பதவியையும் விட்டுக் கொடுத்தார். எவ்விதமேனும் கம்பெனி நன்கு நடத்துதல் வேண்டும் என்பதே அவர் கருத்தாய் இருந்தது.

'சிதம்பரனார் விலகிக்கொண்டால் கம்பெனியும் நன்கு நடவாது, கப்பலும் உருப்படாது,' என்பதை அறிந்த சிலர் அப்பொறாமைக்காரரிடம் மிகவும் வாதாடினர். அதற்கு, "அவரை நாங்கள் நீக்கவில்லை; அவரே விலகிக்கொண்டார். அவரைத் திருப்பி அழைத்துக்கொள்வோம்," என்று அவர்கள் கூறினார்கள்.

கூறியும் என்ன? அவருக்குச் செயலாளர் பதவி தரவில்லை; அவரை 'ஏஜண்டாக இரு,' என்றனர். 'கம்பெனியின் நலத்திலேயே கருத்து

வைத்த அவரும் அதற்கு ஒப்பினர். அசூயைக் காரருக்கு அப்போதும் நிம்மதி பிறக்கவில்லை.

ஏஜெண்டு என்ருல், எண்ணரிய புகழ் கிட்டும் என்று கருதி, 'வெறும் மேலதிகாரியாய்,' இரு என்றனர். இதற்கும் அவர் ஒப்பினர். அப்போதும் நறுமலர் போல அக்கம்பெனியின் புகழ் மணம் எங்கும் கமழ்ந்தது.

உயர்குணங்களுக்கெல்லாம் உறைவிடமாய் இருந்த இந்தியர், நெடுநாளைய ஆங்கில ஆட்சியின் பயனுல் அக்குணங்களை இழக்கவும் மறக்கவும் நேர்ந்தது; சிறுமையும் சீரழிவுமே கொண்டு குலவவும் நேரிட்டது; இல்லையாலுல் செயற்கரிய செயல் புரிந்த சிதம்பரனுரின்மீது அவர்கள் அசூயை கொள்ள இடம் ஏது?

அக்கம்பெனியை கண்ணும் கருத்துமாய்த் தாம் காத்து வந்த விதத்தைச் சிதம்பரனுர் இவ்வாறு கூறுகிருர்.

'தினத்துஒரு சந்தித் தெருவினில் சென்றுயான்
மனத்தொடு பிரசங்க மந்திரம் சொல்லி
ஏழைகள் துணையாம் இன்மண் கொண்டு
பாழாய்ப் போகப் பதறிடச் செய்த
பிசாசுஎனும் உரையொடு பிறவும் கூட்டி
அசைவின்மை என்னும் அக்கினி இட்டும்
மூலை முடுக்கின் மொய்இருள் அகல
வேலை யாட்களின் விளக்கிட்டும் பேய்மொழியும்
திருடனும் அணுகாத் திறத்தொடும் காத்தேன்.'

நோய் வாய்ப்பட்ட குழந்தைகள் அந்நோயினின்றும் நீங்கவேண்டி, முச்சந்தி மண்ணை எடுத்து வந்து, மிளகாய் வற்றல் முதலியவற்றைக் கூட்டி, அக்கினியில் இடுதல் தமிழ் நாட்டு வழக்கம்.

அவ்வாறே நாவாய்க் கம்பெனி என்னும் குழந்தைக்குப் பிணியுண்டானது கேட்டுப் பல வகையான உபாயமும் செய்ததாக நம் சிதம்பர ஞர் அப்பாட்டிலே உருவகமாக அமைத்துள்ளார்.

## 16. தொழிலாளர் வெற்றி

**தூ**த்துக்குடியிலே கோரல் மில்ஸ் என்னும் பருத்தி ஆலை ஒன்று உண்டு. அதில் நூற்றுக் கணக்கான தொழிலாளர் வேலை செய்து வந்தனர். வேலைக்கு ஏற்ற கூலி கிடைக்கவில்லை. தொழிலாளர் அது பற்றிப் பிணங்கி நின்றனர்.

சமரஸத்திற்கு உரிய மார்க்கமெல்லாம் அத் தொழிலாளர் தேடிநின்றும், முதலாளிகள் வழிக்கு வரவில்லை. ஆதலினால், அவர்கள் வேலை நிறுத்தம் செய்ய நேர்ந்தது. தென்னாட்டிலே முதன்முதல் தூத்துக்குடியிலேதான் தொழிலாளரின் வேலை நிறுத்தம் அப்போது ஏற்பட்டது.

அது கண்ட சிதம்பரனார் தொழிலாளரிடம் இரக்கம்கொண்டு, சமரஸம் உண்டுபண்ண முயன்றார். அது பலிக்கவில்லை. வேலையற்ற தொழிலாளரோ, வயிறு காய்ந்து வாடலாயினர். அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு அவர் தலையில் சுமந்தது. சீமான்களிடமும், பொது மக்களிடமும் கேட்டுப் பொருள் சேர்த்து அந்த ஏழைகளை அவர் ஆதரித்து வந்தார். வயிறு குளிர்ந்த தொழிலாளர் அவரைக் கண்கண்ட தெய்வமெனக் கொண்டாடி வந்தனர்.

அப்பருத்தி ஆலை ஆங்கிலேயருக்குச் சொந்தம். தொழிலாளரின் வேலை நிறுத்தத்தினால் அம் முதலாளிகளுக்கு நஷ்டம் அதிகம். ஆயினும், அம்

முதலாளிகள் பிடிவாதமாகவே இருந்தார்கள். ஏழைத் தொழிலாளருக்குச் சிதம்பரனுரின் உதவி கிட்டியது கண்டு அவர்கள் மனம் சகிக்கவில்லை.

வேலை நிறுத்தத்துக்கு அவரே காரணம் என்று அம்முதலாளிகள் கூறி, விஞ்சு என்னும் கலெக்டரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். அக் கலெக்டரும் உடனே சிதம்பரனுரை வருவித்து "அழகிய சாலையை மோசம் செய்தது ஏன்?" என்று பலபடி வினவினுர்.

அதற்கு, "என் மீது குற்றம் இல்லை. தொழிலாளரை வருத்தி முதலாளிகள் வேலை வாங்குகின்றனர்; ஏற்ற கூலி கொடுப்பதில்லை. எனினும், நான் ஓர் உடன்பாட்டினுக்கு முயல்கின்றேன்," என்று சிதம்பரனுர் விடை பகர்ந்தார். அது கேட்டு அக்கலெக்டர் கொதிப்பே கொண்டார்.

"ஏழைகளை மயக்கி வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியது நீரே. இந்த அரசாங்கத்தினிடம் பல வகையான படைப் பலம் உள்ளது!" என்று அக் கலெக்டர் செருக்குடன் செப்பினுர். அதற்கு, "நல்லது, படைப் பலம் இல்லாதவரிடம் படைப் பலத்தைப் பகர்தல் என்ன நீதி?" என்று சிதம்பரனுர் கேட்டார். கலெக்டர் பதில் கூற வகை காணுது விழிக்க நேர்ந்தது.

இதற்கு இடையிலே, அந்த ஆலையின் ஏஜெண்டான சுப்பிரமணிய பிள்ளை என்பவர் சிதம்பரனுரிடம் வந்து, மிகவும் கெஞ்சிய வண்ணம் ஓர் உடன்பாட்டை நாடி நின்ருர்; தொழிலாளரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும் வாக்களித்தார். 'இன்னும் வேண்டுவன செய்யவும் தடையிராது,' என்று உறுதியும் கூறினுர்.

செப்பிய அனைத்தையும் ஏட்டில் எழுதித் தந்தால், அதனைத் தொழிலாளருக்கு அறிவித்து, ஓர் உடன்பாடு காண முயலுவதாகச் சிதம்பரனார் தெரிவித்தார். அவ்வாறே எழுதியனுப்புவதாக விடை கூறிச் சென்றார், அந்த சுப்பிரமணிய பிள்ளை.

'ஒரு பக்கம் கலெக்டர் அச்சம் ஊட்டுகிறார். ஒரு பக்கம் முதலாளியின் பிரதிநிதி கெஞ்சிக் கேட்கிறார். எல்லாம் மாயமாய் உள்ளன,' என்று சிதம்பரனாரும் அவர் தோழர்களும் சிந்தனை செய்ய நேர்ந்தது.

## 17. உச்ச நிலை

**தூ**த்துக்குடியிலே சுதேசிய நாவாய்க் கம்பெனியின் நிலை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வந்தது. அதனால் சிதம்பரனாரின் செல்வாக்கோ பிறைமதி போலப் பெருகிக்கொண்டே போயிற்று. அரசியல் துறையிலே அவரது சொல்லும் செயலும் அனைவரையும் பரவசப்படுத்தி விட்டன.

அதனால், சிதம்பரனார் திருநெல்வேலிச் சீமையிலே முடி சூடா மன்னராய் விளங்கலானார். அவரது வாக்கினுக்கு எதிர் வாக்கு என்பது இல்லை. ஏழை எளியவர் உள்பட எல்லாரும் அவரது சொல் ஆழத்தையும் அரிய ஊழியத்தையும், 'அற்புதம்! அற்புதம்!' என்றே பேசினின்றனர்.

அந்நிலையிலே தூத்துக்குடியில் வக்கீலாய் இருந்த ஒருவர் சிதம்பரனாரின்மீது பொறாமை

கொண்டிருந்தார். மயிர் வினைஞன் ஒருவன் அவ் வக்கீலுக்குப் பணி செய்து நின்ருன். அப்போது அவர் சிதம்பரனரைச் சிறிது இழிவாகப் பேசினர். பேசியதும் அப்பரிகாரி தன் ஆயுதங்களை எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு அரை குறையான க்ஷவ ரத்தில் அவரைவிட்டு அகன்ருன்.

திருப்பதி க்ஷவரக் கோலத்துடன் அவ்வக்கீல் திகைத்து நின்ருர். எந்தப் பரிகாரியும் அவருக்கு வேலை செய்ய முன்வரவில்லை. சிதம்பரனரை இழி வாகப் பேசியதற்கு அதுவே தண்டனை என்று ஊரார் அனைவரும் பேசிக்கொண்டனர். அவரோ, அன்று இரவு போலீஸ் பாதுகாப்புடன் மதுரை சேர்ந்து, மறுநாள் அக்கோலத்தைத் திருத்தி அமைத்துக்கொள்ள நேர்ந்தது.

சுதேசிய இயக்கமும் அரசியல் ஆவேசமும் ஓங்கி நின்ற அந்நாளிலே வடநாட்டில் வங்காளத் தைச் சேர்ந்த பாரிஸால் என்னும் நகரில் பாபு அசுவினி குமார தத்தர் என்பார் தனித் தலைவ ராய்த் திகழ்ந்து வந்தார். அப்போது பரதேசித் துணிகளை விற்க அங்கே எந்த வர்த்தகனும் துணிவு கொள்ளவில்லை.

பாரிஸால் ஜில்லாவின் ஆங்கிலக் கலெக்டருக்கு ஒரு கெஜம் மல்துணி வேண்டியிருந்தது. கடைக் காரர் அனைவரையும் அவர் வேண்டி நின்ருர். அவர் வேண்டிய துணி தர ஒருவரும் முன் வர வில்லை. அதன்மேல் அவர் அசுவினி குமார தத் தரை நாடியடைந்தார். தத்தர் உத்தரவு கொடுத்த பின்பே, அக்கலெக்டருக்கு ஒரு முழம் பரதேசித் துணி கிடைத்தது.

எனவே, வடக்கே பாரிஸால் நகரும், தெற்கே அத்துக்குடி நகரும், அந்நாளிலே தலை சிறந்து விளங்கின. உண்மைத் தலைவர் ஆவார் உயரிய அரசரினும் மேம்பட்டவர் ஆவர் என்பது வெளிப் படை.

'ஒரு சிறிய வக்கீலுக்கு இவ்வளவு செல் வாக்கா? இதனைக் கண்டு நாம் வாளா இருப்பதா?' என்று அதிகாரிகள் ஒருபக்கம் கறுவி நின்றார்கள். ஆங்கில வர்த்தகரோ, 'நமது வாழ்வுக்கும் பெரு மைக்கும் இடறு கட்டையாகத் தோன்றிய சிதம்பர னாரைச் சும்மா விடுவதோ!' என்று சீறி நின்றனர். அதிகாரிகளின் புன்முறுவலுக்கு அண்ணாந்து நிற்கும் சிலரும் சிதம்பனாரின் எடுப்பைப்பொறுக்க முடியவில்லை என்று பொருமி நின்றனர்.

அவ்விதம் நான்கு பக்கமும் சிதம்பரனாருக்கு வைரிகள் தோன்றி, அவரது செல்வாக்கைக் குறைக்கவும், அவரைக் குலைக்கவும் சூழ்ச்சி புரியலாயினர்.

## 18. பாலர் திருநாள்

நமது பாரத பூமியிலே அன்று அரசியல் உலகில் அரவிந்த கோஷ் அரிய தவமணியாய்த் துலங்கினார். பரோடா சமஸ்தானத்திலே மாதம் ஆயிரம் ரூபாய் வருவாய் வந்த பேராசிரியர் வேலையை வீசியெறிந்து தேசசேவை செய்ய வந்த வர் அவர். அவர் 'வந்தே மாதரம்' பத்திரிகையின் ஆசிரியராக அமர்ந்து மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டி வந்தார்.

அச்சமயம் விபின சந்திர பாலர் என்பாரே, இத் தேசமெங்கும் சுற்றித்திரிந்து, எங்கும் இடி முழக்கம் போலச் சொற்பொழிவுகள் ஆற்றி, மக்களின் மனத்திலே சுயராஜ்யத் தீயைத் தூண்டி வந்தார். சென்னை நகரின் கடற்கரையிலே அவர் மிக அரிய சொல் மாரி பொழிந்ததை இன்றும் நம்மவர் படித்து ஆனந்தம் அடையலாம்; வீறுப்பும் கொள்ளலாம்.

அரசியல் துறையிலே முன்னணியில் நிற்கும் தலைவர்களை அடக்கி ஒடுக்கிவிட வேண்டும் என்று அக்காலத்தில் அதிகாரிகள் பெருமுயற்சி செய்தார்கள். அதன் பயனாக அரவிந்தரின்மீது போலீஸார் ஒரு வழக்குத் தொடுத்தனர்.

அவ்வழக்கிலே போலீஸாரின் பக்கம் சாட்சியம் சொல்லும் வண்ணம் விபின சந்திர பாலருக்கு உத்தரவு வந்தது. அவ்வாறே நீதி மன்றத்தில் பாலர் தோன்றினார். ஆனால், சாட்சியம் கொடுக்கவில்லை. 'ஏன்?' என்று நீதிபதி வினவினார். "போலீஸின் தரப்பில் சாட்சியம் கூற மனமில்லை," என்று பாலர் பதிலளித்தார்.

அது நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் என்று கூறி அவருக்கு ஆறுமாதம் காவல்தண்டனை விதித்தார் நீதிபதி. அத்தண்டனை கேட்டு, இந்திய தேசபக்தர் மனம் கொதித்தனர்; அவரது உள்ளத் துணிவு கண்டு, உள்ளம் களித்தனர். அவரைப் போல ஆணித்தரமாகப் பேசுவோர் அருமை. அவரது பேச்சுக்களில் கனல் பொறியும், இரத்தத் துளியும் சிதறும். ஆதலினாலும், அவரிடம் இந்தியருக்கு அளவிலா மதிப்பும் மகிழ்ச்சியும் உண்டு.

அப்பாலர் பெருமான் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டாம் ஆண்டு, மார்ச்சு மாதம், 9-ஆந் தேதி விடுதலை அடைந்தார். அத்தினத்தை ஒரு திருநாளாகக் கொண்டாடுவது என்று, திருநெல்வேலிச் சீமை தீர்மானம் செய்தது. முக்கியமான நகரங்களிலும் ஊர்களிலும் அவரது படத்தைப் பட்டணப் பிரவேசமாக மேளதாளத்துடன் எடுத்துச் சென்று, மாலையிலே பொதுக்கூட்டம் போட வேண்டும் என்பதே மக்களின் எற்பாடாம்.

அது அறிந்ததும் அதிகாரிகளுக்கு அச்சமும் திகிலும் உண்டாயின. 'தூத்துக்குடியிலே ஊர்வலமோ பொதுக்கூட்டமோ நடத்தக் கூடாது!' என்று கலெக்டர் ஆணையிட்டார். அத்துடன் அவர் மனம் சாந்தியடையவில்லை. பதைப்புக்கே ஆளாயிற்று.

அந்நிலையில் ஜில்லாக் கலெக்டர் நம் சிதம்பரனாரை நேரில் வரவழைத்தார்; பாலரின் விடுதலைக் கொண்டாட்டத்தையொட்டி நடக்கும் ஊர் வலத்திலோ, பொதுக்கூட்டத்திலோ கலந்துகொள்ளக் கூடாது என்று எச்சரிக்கை செய்தார்; ஆயினும், எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க அவர் மறுத்து விட்டார்.

அந்த எச்சரிக்கை கேட்டதும் சிதம்பரனார் புன்னகையே புரிந்தார்; "வருவது வருக! முன் வைத்த காலைப் பின்வாங்கப் போவதில்லை!" என்று உறுதியே பூண்டார்.

# 19. சுப்பிரமணிய சிவம்

அரசியல் துறையிலே சிதம்பரனாருடன் சேர்ந்து உழைத்தவர்களில் சுப்பிரமணிய சிவம் என்பவர் தலை சிறந்தவர். அச்சிவம் தமது இளமையில் திருவனந்தபுரத்தில் இருந்தவர்; வாலிப நிலையிலேயே வேதாந்தப் பற்று மிகுந்து துறவுத் தன்மை கொண்டவர்.

வங்காளப் பிரிவினையின் காலத்திலே அவரிடம் தேச ஆர்வத் தலை தூக்கியது. ஆதலின், அவர் எங்கும் சென்று வீரப் பிரசங்கங்கள் புரிந்து வந்தார், திருநெல்வேலிச் சீமையிலே அவரது சிம்ம கர்ஜனை கேளாத ஊரே இல்லை. ஒரு சமயம் தூத்துக் குடியிலே சிவத்தின் சொற்பொழிவைச் சிதம்பரனார் கேட்க நேர்ந்தது. வீரரை வீரர் வியப்பர் அல்லரா?

பேச்சு முடிந்ததும், சுப்பிரமணிய சிவத்தை நம் சிதம்பரனார் கட்டித் தழுவி, ஆனந்தம் எய்தினார். அது முதல் இருவருக்கும் ஒற்றுமை மிகுந்தது; பாசம் முதிர்ந்தது; நேசம் வளர்ந்தது. இருவரும் இணை பிரியாத் தோழர் ஆயினர்.

காற்றும் நெருப்பும் மூண்டால் எப்படியோ, அப்படியே முடிந்தது இருவரின் பேச்சும். அது முதல் மேடைமீது இருவரும் தோன்றி வீர கர்ஜனை புரிதல் வழக்கம். பொது மக்கள் அவ்விருவரின் பேச்சையும் கேட்டு, என்றுமிலா உணர்ச்சிக்கும் மட்டற்ற கிளர்ச்சிக்கும் ஆளாவார்கள்.

கவியரசரான சுப்பிரமணிய பாரதியார், அச்சிவத்தின் உணர்ச்சி வெள்ளத்தைக் கண்டு உள்ளம் பூரித்தார். அன்னிய வர்த்தகருக்கும் அதி

காரிகளுக்கும் சிவத்தின் பேச்சு என்றால், உடலும் உள்ளமும் நடுங்கும். சுதேசியக் கிளர்ச்சிக்கும் அரசியல் உணர்ச்சிக்கும் சிவத்தின் பேச்சே செழுமை ஊட்டும் மழை போல ஆயிற்று.

தமிழ் நாடெங்கும் சிவம் சுற்றுப்பிரயாணம் செய்து, ஆங்காங்கு இருந்த வாலிபரைத் திரட்டினர். அவர்களின் உள்ளத்தே தேசபத்தியைக் கொழுந்துவிடச் செய்தார். சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்கள் தமிழகத்தின் தெருவெல்லாம் முழங்கும்படி ஆக்கியவர் அவரே.

தேசபத்தி என்பதை ஒரு வெறியாகக் கொண்டு ஊழியம் புரிந்தால் அல்லாமல், அன்னிய ஆட்சியை அகற்ற முடியாது என்று கூறி நம் தமிழக இளைஞரில் பலருக்கு தேச வெறி ஊட்டிய பெருமைக்கு அவரே உரியவர்.

அன்னியர் எவருக்கும் அடங்கியிராத பரிபூரண சுயராஜ்யமே வேண்டும் என்று ஆதி முதல் அவர் வலியுறுத்தி வந்தவர். பாரத மாதா சங்கம், பாரத சங்கம் என்ற சங்கங்களை நிறுவி, எங்கும் தேச பத்தியை விதைத்து வந்தார் அவர்.

இப்போதுள்ள தேசத்தலைவர்களிலும் மந்திரிமாரிலும் அவரது பிரசங்கத்தைக் கேட்டுக் களிக்காதவர் இல்லை. பெருநோய் என்னும் நோய்க்கு ஆளாகி வாடியும், பன்முறை சிறையில் கிடந்தும் தேசபத்தியிலோ, கிளர்ச்சியிலோ அவர் இம்மியும் குன்றியதில்லை. வயது ஆக ஆக அவரது வீரமும் தீரமும் வளர்ந்தோங்கி அனைவரையும் வசஞ்செய்து வந்தன. அவரைப் போன்ற வீரப் பேச்சாளர் இன்னும் உதிக்கவில்லை.

# 20. சிறை புகுதல்

அதிகாரிகளின் அடக்கு முறையையும் சிதம்பரனாரின் தீவிரப் போக்கையும், சுப்பிரமணிய சிவத்தின் சலியா மனத்தையும் கண்டவுடனே சுதேசிய நாவாய்க் கம்பெனியின் நிர்வாகிகள் நடுக்கம் மிகுந்து, நிலையில் திரிந்தனர்.

அந்நிருவாகிகள் தம்முள் கூடி, 'சிதம்பரனார் அரசியல் துறையிலிருந்து விலக வேண்டும்; விலகினால் அல்லாமல் கம்பெனிக்கு நாசமே வந்து எய்தும்,' என்று ஒரு தீர்மானம் செய்தனர். ஆயினும், அவரை வேலையிலிருந்து நீக்கிவிட அவர்களுக்கு மனவலி இல்லை.

அச்செய்தி சிதம்பரனாருக்கு எட்டியது. அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை. முன்னதாகவே செய்திருந்த ஏற்பாட்டின்படி 1908-ஆம் வருஷம், மார்ச்சு மாதம், 9-ஆந் தேதி 'பாலரின் திருநாள்' திருநெல்வேலியிலே மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

சிதம்பரனாரும், சுப்பிரமணிய சிவமும் அக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்; பொதுக்கூட்டத்திலும் வழக்கம் போல வீரம் ததும்பப் பேசினர். அங்கே கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்களிடையே என்றும் இல்லாத உற்சாகமும், ஆவேசமும் ததும்பலாயின.

அதிகாரிகள் அது கண்டு, அவரது சிங்கநாதத்தை உணர்ந்து, அவரைச் சிறை செய்தே தீர வேண்டும் என்று முடிவு கட்டினர். தூத்துக்குடியிலேயே அவரைக் கைது செய்ய அதிகாரிகளுக்குத் துணிவு பிறக்கவில்லை. கைது செய்தால், கலகம் விளையும் என்றே அஞ்சி நின்றார்கள்.

ஆதலினால், சிதம்பரனார், சிவம், பதுமநாப ஐயங்கார் ஆகிய மூவரும் திருநெல்வேலிக்கு வந்து, தம்மைக் கண்டு பேச வேண்டும் என்று கலெக்டர் விஞ்சு உத்தரவு அனுப்பினார். அவ்வாறே மார்ச்சு மாதம் 12-ஆந் தேதி அம்மூவரும் சென்று கலெக்டரைக் கண்டு பேசினர்.

கலெக்டரோ,' உங்களது சொல்லினாலும் செயலினாலும் இங்கே குழப்பம் நேரும் என்று தோன்றுகிறது. ஆதலின், ' நன்னடத்தை ஜாமீன் தரவேண்டும்,' என்று கேட்டார். அதற்கு மூவரும் மறுத்தனர். மறுக்கவே, கலெக்டருக்குக் கோபம் பிறந்தது. இதற்கு இடையிலே கோர்ட்டின் சுவர் மீது ' வந்தே மாதரம் ' என்னும் வாசகம் வரைந்திருப்பதை அக் கலெக்டர் நோக்கினார்.

உடனே, அவ்வாசகத்தை அழித்துவிடுமாறு கலெக்டர் ஆணையிட்டார். கோர்ட்டுக்கு வெளியே கூடியிருந்த ஜனங்கள், ஒரு முகமாக, ' வந்தே மாதரம் ' என்று கோஷம் செய்தனர். அது கேட்டதும் கலெக்டரின் நெஞ்சம் பதைத்தது. ' ஜாமீன் கொடோம் ' என்று அம்மூவரும் சொன்ன பதிலும், அப்பதைப்பை இன்னும் பெருக்கியது.

அதனால், அம்மூவரையும் கைது செய்து, சிறைக்குக் கொண்டு போகும் வண்ணம் ஆணை பிறந்தது. அம்மூவர்மீதும் வழக்கு நடத்தவும் கலெக்டர் கருதி, ஒருநாளைக் குறிப்பிட்டார். மூவரும் பாளையங்கோட்டையிலுள்ள சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அச்செய்தி சண்டமாருதம் போல எங்கும் பரவிற்று. அது கேட்ட மக்கள் மனக்கொதிப்புடன் மண்டியெழுந்தார்கள்.

# 21. புரட்சித் தீ

மறுநாள், மார்ச்சு 13-ஆந் தேதி, திருநெல்வேலி நகரமெங்கும் வர்த்தகர், தத்தம் கடைகளை மூடி, வருத்தம் தெரிவித்தனர். மாணவர்களோ, கூட்டமாகச் சேர்ந்து, நகரமெங்கும் ஊர்வலமாய் வந்து, 'வீரத் தலைவர்கள் சிறைக்குள் கிடக்கின்றார்கள். அவர்களை விடுவித்தாக வேண்டும்!' என்று உரைத்த வண்ணம் பலருக்கும் ஊ[illegible] ஊட்டினார்கள்.

அன்று மாலையிலே, பொது மக்கள் ஊர்வலம் வந்து, பொதுக்கூட்டம் போட்டு, அதிகாரிகளைக் கண்டித்தார்கள். தொழிலாளர் சிறுசிறு வீர கோஷங்களை எழுப்பினர். எங்கும் சுதந்திரப் பேச்சும், 'வந்தே மாதர' முழக்கமும் காது செவிடு பட ஒலித்தன.

வெள்ளையரைக் கண்டால் ஒரு வெறுப்பும், அதிகாரிகளைக் கண்டால் ஓர் அத்திரமும், அன்னிய ஆடை தரித்தவரைக் கண்டால் கோபமும் மக்களிடையே நிரம்பின. மக்களிலே சிலர் நெறி பிறழ்ந்து, மதி தவறிக் காரியம் செய்யமுயன்றனர்.

அதன் விளைவாக வீதியிலே ஆங்காங்கு இருந்த முனிஸிபல் விளக்குகள் பிடுங்கி எறியப் பட்டன. மண் எண்ணெய்க் கிடங்கு தீக்கு இரையாயிற்று. சிலர் நகரசபையின் காரியாலயத்தில் புகுந்து, ஆங்கிருந்த பொருள்களையெல்லாம் வெளியே வாரிக் கொணர்ந்து, தீக்கடவுளுக்குத் தானம் செய்தனர்.

அங்கே பாதிரிமாரின் கல்லூரிக்குள் சிலர் புகுந்து, ஆங்கிருந்த தலைமை ஆசிரியரை 'வந்தே

மாதரம்' என்று சொல்லும் வண்ணம் கட்டாயப் படுத்தினார். அவரும் அவ்வாறே மூன்று முறை 'வந்தே மாதரம்' என்று உறக்கக் கூறினார். அக் கல்லூரியின் பொருள்களும் வீதியிலே வீசியெறியப் பெற்று, தூள்தூள் ஆயின.

அப்பால் ஜனக்கூட்டம் அங்குள்ள போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்து, துப்பாக்கி ஈட்டி முதலிய ஆயுதங்களை நாசம் செய்தது; அக்கட்ட டத்துக்கும் தீ மூட்டிக் கொளுத்திற்று. போலீஸால் அக்கூட்டத்தை அடக்க முடியவில்லை.

கலெக்டர் அது அறிந்து, போலீஸ் தலைமை அதிகாரியுடன் விரைந்து வந்து, தமது கைத் துப்பாக்கி கொண்டு, ஜனக்கூட்டத்தை நோக்கிச் சுடலானார். அதனால், நால்வர் மாண்டுபோக, மூவர் படுகாயம் அடைந்தனர். மாண்டவருள் இருவர் ஒருபாவமும் அறியாத சிறுவர்.

மாண்டு விழுந்தோரின் சவத்தை எடுத்து அடக்கம் செய்யவோ, படுகாயம் அடைந்தோர்க்கு மருத்துவ உதவி புரியவோ, அதிகாரிகள் அக்கறை கொள்ளவில்லை. மாலை வரையில் சவங்கள் வீதி யிலேயே கிடக்கலாயின. பின்பே உறவினர் வந்து, அச்சவங்களை எடுத்துச் சென்றனர்.

கைத்துப்பாக்கி கொண்டு கலெக்டர் சுடுகை யில் சிலர் அவரது குதிரையின்மீது பாய்ந்து, அவரைத் தாக்க முயன்றனர். அதனால் அவர் சிறு காயம் அடைந்தார். போலீஸ் தலைமை அதி காரியோ, ஜனங்கள் வீசிய கற்களால் மண்டை உடையப் பெற்றார். இவ்விதம் மூன்று நாட்கள்

வரையில், கலகமும் குழப்பமும் தலை தூக்கி நின்றன.

அதே சமயத்தில் தூத்துக்குடியிலும் ஜனங்கள் கோபங் கொண்டு எழுந்து, அல்லோல கல்லோலம் செய்தார்கள். அங்கும் சர்க்கார்க் காரியாலயங்களில் சில தாக்கப்பட்டன. இரண்டோர் இடங்களில் தீ மூட்டவும் நேர்ந்தது. தச்சநல்லூர் என்னும் ஊரில் கச்சேரியொன்று நெருப்புக்கு இரையாயிற்று.

அமைதியை நிலவச் செய்தல் ஆகாத காரியம் என்று கலெக்டர் கண்டுகொண்டார். அதன்மேல் ரிஸர்வ் போலீஸ் படை வந்து சேர்ந்தது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தச்சநல்லூர் என்னும் இடங்களில் அப்படை காவல் புரியலாயிற்று. அதன் செலவை ஜனங்களே ஒப்புக்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறந்தது.

அக்கலகத்தின் விளைவாக சுமார் தொண்ணூறு பேர்கள்மீது வழக்கு நடந்தது. ஐவர் தவிர, அனைவரும் பலவாறான தண்டனைக்கு ஆளாயினர். தூத்துக்குடியிலிருந்த ஆங்கில வர்த்தகரும், அவர்களின் சிப்பந்திகளும் தங்களது உயிருக்கே ஆபத்து வரும் என்று அஞ்சிவிட்டார்கள். அதனால், இரவு நேரத்திலே அவர்கள் அந்நகரிலே தங்கியிருக்க ஒப்பவில்லை.

ஆதலினால், துறைமுகத்திலிருந்து ஏழு மைலுக்கு அப்பால் கடலிலே நிற்கும் கப்பல்களில் அவர்கள் இரவுப் போதைக் கழித்தார்கள். இவ்விதம் ஒரு வாரகாலம் அவர்கள் பகலிலே நகரிலும், இரவிலே கப்பலிலுமாக வசித்து வந்தார்கள்.

அப்போது அவர்கள் சென்னைக் கவர்னருக்குத் தந்திமேல் தந்தி கொடுத்து அபயம் வேண்டினார்கள். அது காரணமாகவே ரிசர்வ் போலீஸ் படை வரலாயிற்று. பலவாரான மக்களின்மீது வழக்கும் ஏற்பட்டது.

## 22. அறிவுச் செல்வம்

சுப்பிரமணிய சிவம், பதுமநாப ஐயங்கார், சிதம்பரனார் ஆகிய மூவர் மீதும் நன்னடக்கை ஜாமீன் வழக்குப் பல நாள் நடைபெற்று வந்தது. அப்போது அம்மூவரும் பாளையங்கோட்டைச் சிறையில் காவலிலே வைக்கப் பெற்றிருந்தனர்.

'யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு ?'

என்பார் திருவள்ளுவ நாயனார். கண் மூடும் வரையில் ஒரு கணமும் வீணே கழியாமல் கற்று, அறிவுச் செல்வத்தை வளர்த்து வரல் வேண்டும் என்பதே அக்குறளின் கருத்தாம். அதற்கு இணங்க அம்மூவரும் காவலில் கிடந்த நாளிலும் பற்பல நூல்களைப் படித்து, கல்விச் செல்வத்தை வளர்த்து வந்தனர். அது குறித்துச் சிதம்பரனார் செப்புவது இது :

'வள்ளுவர் மறையும் மாண்புஉயர் நல்லாப்
பிள்ளைபா ரதமும் பெரும்பொருள் நிரம்பிய
பகவத் கீதையும் படித்தேம் ; பிந்திய
தகவல் தெரிந்திட ஜாதகம் பார்த்தேம் ;
ஜோதிஷம் பலவும் தொகுத்துள நூல்சில
வாசித்து உரைத்தோம் ; வந்த கைதிகள்
மதுரை வீரனின் வலம்நிறை சரிதமும்
சதுர மாக சர்க்கா ரொடுபல

சண்டைகள் புரிந்து தன் திறம் காட்டி
எண்டிசை யும்புகழ் இயம்பிட நிற்கும்
நமதுபாஞ் சால நாயகன் சரிதமும்
எமதுஉளம் களித்திட இன்பொடு கேட்டேம்.'

இவ்விதம் அவர்கள் தங்களறிவைப் பெருக்கி வந்ததுடன் உடல் நலத்திலும் உள்ளம் செலுத்தி நின்றார்கள். காலையும் மாலையும் அவர்கள் கஸரத்து, பஸ்கி முதலிய உடற்பயிற்சிகள் புரிந்து, யாக்கையை நன்னிலையில் காத்து வந்தார்கள். சிறைக்குள் கிடக்கின்றோமே என்னும் சிந்தனையே அவர்களுக்குத் தோன்றவில்லை.

ஜாமீன் வழக்கில் தக்க சாட்சியங்கள் ஏற்படவில்லை. அதனால், அம்மூவரையும் தண்டிக்க வகை காணாத கலெக்டர் விஞ்சு, கலங்கலானார்; போலீசாருடன் கலந்து ஆலோசனை செய்தார்; பிள்ளை, சிவம் இருவரையும் புதியதொரு வழக்கில் மாட்டி வைக்க வேண்டும் என்று அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தார்கள்

விபின சந்திர பாலரின் விடுதலைத் திருநாளிலே சிவமும், பிள்ளையும் சிறக்கப் பேசினார் அல்லவா? அப்பேச்சில் அரசநிந்தனை நிரம்பியுள்ளது. எனவே, இருவர்மீதும் அரசநிந்தனை வழக்குத் தொடுத்தல் வேண்டும் என்று விஞ்சு துரை தம் மேலதிகாரிகளுக்கு எழுதினார். அவர்களும் அதற்கு ஒப்பம் கொடுத்தார்கள்.

அவ்வாறே 1908-ஆம் வருஷம், மார்ச்சு மாதம், 26-ஆந் தேதி, அரசநிந்தனை வழக்கு ஆரம்பம் ஆயிற்று. இதற்கு இடையில், ஜாமீன் வழக்கைத் தழுவி அம்மூவரையும் சிறையில் வைத்திருக்க நியாயம் இல்லை. ஆதலின், உடனே விடுவிக்க

வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றத்தார் உத்தரவு செய்தனர்.

அதன்படி மூவரும் விடுதலையாகி வெளியே வருகையில், போலீஸார் தோன்றி, சிவம், பிள்ளை இருவரையும் புதிய வழக்கினுக்காக மீண்டும் சிறை செய்தனர். பதுமநாப ஐயங்கார் விடுதலை பெற்றுத் தமது வீடு திரும்பினர். அது பார்த்து இருவரும் அகம் மிக மகிழ்ந்தனர்.

## 23. குற்றச் சாட்டு

அரச நிந்தனையாகச் சிதம்பரனாரின்மீது ஏற்பட்ட குற்றச்சாட்டுகள் விசித்திரமாய் இருக்கும். ஆதலின், அவற்றை இங்கே தொகுத்து உரைப்போம் :

"தேச மக்கள் ஒன்றுபட்டால், வெள்ளையரை விரட்டிவிடலாம். நாம் அனைவரும் ஒன்றுபட்டுள்ளோம் என்று தெரிந்தாலே போதும். அவர்களே இத்தேசத்தை விட்டுப் போய்விடுவார்கள்.

"நமது பாரத பூமியில் ஐம்பதாயிரம் ஐரோப்பியரே இருக்கின்றனர். அடிபிடி கட்டாயத்தின் மேல் அவர்களை வெளியேற்றுதல் எளிதேயாகும். ஆயினும், இந்தியராகிய நாம் அவ்வாறு அடிபிடி கட்டாயம் செய்யக்கூடாது என்றாலும், ஐரோப்பியரைக் கண்டு நாம் அஞ்சி நிற்க அவசியம் இல்லை.

"பர நாட்டுத்துணி, சர்க்கரை, பீங்கான் பாத்திரங்கள் முதலிய சரக்குகளை வாங்குவதில்லை என்று முடிவு கட்டிய வண்ணம் நாம் எல்லோரும் நடந்து வந்தோமானால், ஆங்கிலேயர் தாமாகவே இத்தேசத்தை விட்டுப் போய்விடுவர்.

" பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு நம்மவருட் சிலர் இன்னும் உதவி புரிந்து வருகின்றனர். 'ஏன் உதவி புரிகிறீர்கள்?' என்று அவர்களை நான் கேட்கப் போவதில்லை. என்னிடம் சிலர் வந்து, அவர்களுக்கு கேடு செய்தாக வேண்டும் என்று கூறினர். கேடு இழைக்க வேண்டா என்று நான் தடுத்தேன். ' வருவது வருக! அவர்களுக்குப் புத்தி புகட்டியே தீர வேண்டும்!' என்று அச்சிலர் துணிந்து கூறினர்.

" ' அன்னிய ஆடை தரிப்போருக்கு இனி நாங்கள் வேலை செய்யப் போவதில்லை!' என்று நாவித நண்பர்கள் வாக்குறுதி செய்துள்ளார்கள். சீமைத் துணிகட்டுவோர் வந்தால் சிறிதளவு க்ஷவரம் செய்துவிட்டு அரைகுறையாக அனுப்பிவிட அந்நாவிதர்கள் துணிந்துள்ளார்கள்.

" சுய ஆட்சியைத் தவிர, வேறு ஆட்சியை— அன்னிய ஆட்சியை விரும்புவார் இங்கு உண்டோ? வருவன வருக. சுய ஆட்சி எய்த முனைக. எதற்கும் அஞ்சற்க."

' வேண்டாத மனைவிக்குக் கால் பட்டால் குற்றம், கை பட்டால் குற்றம்,' என்பார்கள். அரச நிந்தனை என நம் சிதம்பரனாரின்மீது சாட்டிய குற்றங்களின் பான்மையை வாசகரே அறிந்து கொள்ளட்டும். அவரைச் சிறைக்குள் தள்ளிவிட வேண்டும் என்பதே அதிகாரிகளின் கருத்தாகும்.

அன்னாளிலே தஞ்சை வக்கீலான திரு. என். கே. இராமசாமி ஐயர், தீவிர தேசியவாதி. ஆதலின், அவர் துணிவு மிகுந்து, அரசநிந்தனை வழக்கில் சிதம்பரனாருக்காக வாதிக்கலானார். வழக்கு நடந்து வருகையில், அந்த வக்கீலிடம்

மாஜிஸ்திரேட்டு, மரியாதையாக நடந்துகொள்ள வில்லை.

சிதம்பரனார் அதை அறிந்ததும், 'இனி எதிர் வழக்கு ஆடப் போவதில்லை!' என்று கூறிவிட்டார். வக்கீல் ஐயரும் விலகிக்கொண்டார். எதிர் வழக்கு ஆடாவிடினும் என்ன? அரச நிந்தனை உண்டு. ஆதலின், ஜில்லா நீதிபதியே வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டும் என்று மாஜிஸ்திரேட்டு உத்தரவு செய்துவிட்டார்.

## 24. சீராயுள் தண்டனைகள்

கொலைக்குற்றம், பெருத்த மோசம், அரச நிந்தனை முதலிய வழக்குகளை விசாரிக்கும் ஜில்லா நீதிபதியைச் செஷன்ஸ் ஜட்ஜ் என்று சொல்லுவார்கள். அத்தகைய ஜட்ஜாய் அமர்ந்து இருந்தவர் பின்ஹே என்னும் ஆங்கிலேயர்.

நான்கு மாதகாலம் அவ்வழக்கு விசாரணை நடந்து வந்தது. சென்னையிலிருந்த பிரபல வேதிய வக்கீல்களுள் மூவர் சிதம்பனாரின் பக்கம் வெகு திறமையாக வாதித்தனர். அரசாங்கத்தின் பக்கமோ, அதி சிறந்த ஆங்கில வக்கில்கள் தோன்றி, தங்கள் திறமையெல்லாம் காட்டி வாதம் புரிந்தார்கள்.

அன்னிய ஆங்கிலேயரின் ஆட்சி முறை நடந்து வருகையில் அது ஒழிய வேண்டும் என்றே சிதம்பரனாரும், சிவாவும் பேசினர். அந்த ஆங்கிலே யரே அவ்விருவர் மீதும் வழக்குத் தொடுத்தனர். விசாரணை செய்யும் நீதிபதியும் ஆங்கிலேயரே. ஆதலின், கொடிய தண்டனை கொடுக்க வேண்டும்

என்பது முன்னதாகவே முடிவு ஆகிவிட்டது. விசாரணை என்பது மேல் பூச்சுத்தான்.

அங்கிலேயில் இரு முறை ஆயுள் அளவும் அந்தமான் தீவில் காவலிலே கிடக்க வேண்டும் என்று சிதம்பரனாருக்குத் தண்டனை விதிக்கப் பெற்றது. சிவாவுக்கோ, பத்து வருஷம் தீவாந்திர தண்டனை கிட்டியது. மனிதருக்கு ஒரே ஆயுள்தான் உண்டு. இரண்டு முறை ஆயுள் தண்டனை அனுபவித்தல் எங்ஙனம்?

அச்சமயம் சுப்பிரமணிய சிவம் மிகவும் அரிய வாக்கு மூலம் ஒன்று கொடுத்தார். அது ஓர் இலக்கியம் போலவே இன்றும் காணப்படும்.

தண்டனை கொடுத்த நீதிபதி தமது தீர்ப்பில், "பிள்ளை ஒரு பெரிய ராஜத் துரோகி. அவரது எலும்புக்கூடும் ராஜ விசுவாசத்துக்கு விரோதம் ஆனது. கைத்தொழில் வளர்ச்சிக்கு உழைப்பதாக உரைத்து, ஐரோப்பியரை விரட்டவே அவர் கருதுகிறார். அரசியலைப்பற்றி வாய் திறக்க இந்தியருக்கு உரிமை ஏது?" என்றெல்லாம் கூறியுள்ளார்.

1908-ஆம் வருஷம், ஜூலை மாதம், 7-ஆந் தேதி அத்தகைய தீர்ப்பு ஏற்பட்டது. அது கேட்டதும் பிள்ளை, சிவம் இருவரின் முகத்தையும் எல்லாரும் பார்த்தனர். முகத்திலே துயர்க்குறி ஒன்றும் காணப்படவில்லை. அகத்தில் இருந்தால் அல்லவா முகத்தில் தோன்றும்?

மன மலர்ச்சியுடன் இருவரும் சிறைக்குப் புறப்பட்டனர். அப்போது தூத்துக்குடி மாசிலாமணிப் பிள்ளை என்பார், மனவாட்டத்துடன் சிதம்பரனாரை நோக்கினர். அத்தருணம், சிதம்பரனார் சொல்லியது ஈதாகும்:

"தம்பி, அஞ்சாதே! கிடக்கிறான் இந்தப் பயல்! இருக்கிறது ஹைகோர்ட்டு. அங்கே அடித்துத்தள்ளி வந்துவிடுவேன்! கலங்காதே! தைரியமாய் இரு!"

அச்சொல்லைக் கேட்டதும் மாசிலாமணிப் பிள்ளை வியப்புக் கொண்டது ஒரு புறம் இருக்க, உடன்வந்த போலீஸ் சேவகரோ, "அஞ்சா நெஞ்சுடைய ஆண்மையாளர் இவர்! பூமியே புரண்டு வந்தாலும் சிறிதும் சலியாத வீரபுருஷரே இவர்!" என்று தம்மை அறியாமல் பாராட்ட நேர்ந்தது.

சிதம்பரனார் இங்கே சிறைத் தண்டனை அடைந்த அதே வாரத்தில் வடஇந்தியாவிலே லோகமான்ய பால கங்காதர திலகர்—சிதம்பரனாரின் அரசியல் குரு—ஆறு வருஷம் தண்டிக்கப் பெற்றார்.

## 25. மந்திரியாரின் மறுக்கம்

ஆயுள் அளவும் தீவாந்தர சிட்சை என்றால், முன் பின் அறியாத அந்தமான் தீவு சென்று இருபது வருஷம் சிறையில் கிடந்து அங்கே அதிகாரிகள் இட்ட வேலையை இனிது செய்ய வேண்டும். பிழைத்திருந்தால், அதன் பின் சொந்த ஊர் வந்து வாசிக்கலாம்.

இரட்டை ஆயுள் தண்டனை என்று கேட்டதும் பாரத பூமியில் உள்ள மாந்தர் அனைவரும் திடுக்கிட்டனர்; தேம்பித் துடித்தனர்; 'வதைத்து வஞ்சம் தீர்க்கும் தண்டனையே!' என்று கூக்குரல் எழுப்பினர்; 'சுதேசமித்திரன்' பத்திரிகை எழுதியது இது:

"இத்துணைக் கொடிய தண்டனை விதிக்கப்படும் என்று நாம் கனவிலும் கருதவில்லை. தண்டனையை நினைக்கையில் மயிர்க்கூச்சு எறிகிறது! எழுதவோ, கை கூசுகிறது! தென்னிந்திய மக்கள் இத்துயரை எங்ஙனம் தாங்குவார்கள்!

"கப்பல் கம்பெனியை நிறுவாமலும், சுதேசியத் தொழில்களின் விருத்திக்கு உழைக்காமலும், கோரல்மில் தொழிலாளருக்கு உதவாமலும் பிள்ளை சும்மா இருந்திருந்தால், நீதிபதி பின்னேறு குறைந்த தண்டனை கொடுத்திருப்பார் போலும்! தேசபக்தி மிகுந்து பொது நலத்துக்கு உழைத்ததே பிள்ளைக்குத் தீம்பாய் முடிந்தது."

அப்போது லண்டன் நகரிலே இந்தியா மந்திரியாராய் இருந்தவர் லார்டு மார்லி எனப்படுவார். அவரும் மனம் பதைத்தார்; மறுகினார்; அரசப் பிரதிநிதியாய் இருந்த லார்டு மிண்டோவுக்கு இவ்வாறு எழுதினார்:

"தூத்துக்குடி மனிதர் (சிவம், பிள்ளை) இருவருக்கும் விதித்துள்ள தண்டனையை நான் சிறிதும் ஆதரிக்க முடியாது. அடுத்த தபாலில் அத்தீர்ப்பு எனது பார்வைக்கு வரும். அத்தண்டனைகள் நிலைக்க மாட்டா. எக்காரணம் கொண்டும் இக்கொடிய காரியங்களை நான் ஆதரியேன்!

"இத்தகைய பிழைகளையும், முட்டாள் தனங்களையும் நீங்கள் உடனே கவனித்தல் வேண்டும். அங்கே நாம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டுவது தான். ஆயினும், கொடுமை மிஞ்சிவிடின், ஒழுங்கு என்பது நிலைக்குமோ? வெடிகுண்டு வீச்சுக்கு அக்கொடுமையே மார்க்கம் ஆகும்."

சிவமும் சிதம்பரனாரும் சிறைக்கூடம் சேர்ந்ததும், ஆங்கிருந்த அதிகாரியும் பிறரும் அவ்விருவரையும் அடுத்து, "ஐயகோ!" என்று அழுதனர். பிள்ளை அதுபார்த்து யாது சொன்னார்? அவரது கண் கலங்கியதோ? கருத்துத்தான் மாறியதோ? இரண்டும் இல்லை.

"நினைத்தபடியே அந்நீதிபதி நிகழ்த்தினான் தீர்ப்பு. ஆதலின், நீவிர் மனவலி கொண்டு உமது மனத்துயர் மாற்றுக," என்றே அவர்களுக்கு ஆறுதல் கூறினார் சிதம்பரனார். அப்போதும் அவர்களின் கண்ணீர் அடங்கவில்லை. அவர்களோ, "ஐயா, நீர் இனி அயரேல்!" என்று கூறினார்கள்.

அதற்கு "அயர்தல் என்பது என்றும் என்னை அணுகாது. உயர்தல் ஒன்றே உடன் வந்து எய்தும்," என்று சிதம்பரனார் சிரித்த முகத்துடன் செப்பினார். அன்னியரே அவ்விதம் அழுது புலம்பினார் என்றால், அவர் தந்தையாரும் மனைவியாரும் எத்துணை வருந்தியிருப்பார் என்பதை விளம்ப வேண்டுமா?

## 26. வினையின் பயன்

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்;
தினை விதைத்தவன் தினை அறுப்பான்,'

என்று நாட்டுப் பழமொழி ஒன்று உண்டு. நீதியும் நேர்மையும் பாராது வஞ்சமே மிகுந்து நீதிபதி பின்ஹே என்பவர் தீர்ப்பு அளித்தார் அல்லவா? தீர்ப்பு அளித்த போது அவர் ஜில்லா நீதிபதியாய் இருந்தார். அவரது தீர்ப்பினைக் கண்டு மேலதிகாரிகள் மகிழ்ந்து, அவரைச் சென்னை உயர்

தர நீதி மன்றத்தின் ஒரு நீதிபதியாக உயர்த்தினர். சின்னாள் வரையில் அவர் அப் பெரும்பதவியில் இருந்து வந்தார். அப்பாலோ, அவர் தமது பதவி யையும் ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தையும் கைவிட்டு இங்கிலாந்துக்குப் போய்விட நேர்ந்தது.

அதன் காரணம் யாது? கொடுந்தண்டனை விதித்து, நீதி முறை பிறழச் செய்த அவர்மீது இந்தியா மந்திரியாருக்கு வெறுப்பே மிகுந்தது. தேசத்திலே அப்போது பொங்கியெழுந்த சுதந்திர ஆவேசத்தைக் கண்டு, அம்மந்திரியார் சிந்தனை செய்யவும் நேர்ந்தது. அது பற்றியே அவரை வேலையை விட்டுவிடும் வண்ணம் அம்மந்திரியார் உத் தரவிட்டார் என்பது அரசியல் அந்தரங்கமாகும்.

அநியாயத் தீர்ப்புக்கு மாற்று வேண்டுமே! அதற்காகச் சிதம்பரனார் சென்னை உயர்நீதி மன் றத்திற்கு 1908-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அப்பீல் செய்துகொண்டார். நீதிபதிகள் இருவர் அந்த அப்பீலை ஆராய்ந்து, தண்டனைக் காலத்தை ஆறு வருஷமாகக் குறைத்தனர்.

அவ்வேளை வழக்கின் செலவுக்கு ஏராளமான திரவியம் தேவையாயிற்று. பிள்ளையின் மனைவியார் விண்ணப்பம் ஒன்று எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டார். தமிழகத்தார் தட்டாது பேராதரவு புரிந்தனர்.

மேலும், இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் குடியேறி வாழும் தமிழரும், உலகின் வேறு பல பகுதிகளில் வசிக்கும் இந்திய மக்களும், இயன்ற அளவு பொருள் கொடுத்து ஆதரவு காட்ட முன் வந்தார்கள். உண்மை ஊழியம் உலகத்தாரின் உள்ளத்திலே குடி கொள்ளாமல் போகுமோ?

தண்டனைக் காலத்தை முதலிலே கோவைச் சிறையிலும், பின்பு கண்ணனூர்ச் சிறையிலுமாக அவர் கழிக்க நேர்ந்தது. நன்னடக்கைக் கழிவு, அரசாங்க ரஜா முதலியவற்றைக் கழித்துப் பார்த்தால், அவரது சிறைவாசம் சுமார் நாலரை ஆண்டே ஆகும். அந்நாளிலே சிற்சில தேசபக்தரே அருமையாகச் சிறை புகுந்தனர். அன்று சிறை விதிகள் மிகக் கடுமையாகவும், மிக ஈனமாகவும் இருந்தன. தன்மானம் உள்ளவன் சிறையில புகுந்தால், ஒன்று ஞானியாய் வெளி வருவான்; அல்லது மிருகப் பிராயமாகவே வெளி வர நேரும்.

✓அரசியல் கைதியென அவரைச் சிறை அதிகாரிகள் நினைக்கவில்லை. கொலை, திருட்டு முதலிய பாவச் செயல் புரிந்த கொடியவரைவிடக் கேவலமாகவே நடத்தி வந்தனர். அவர்மீது அதிகார வர்க்கத்துக்கு எழுந்த சீற்றம் சிறைக்குள்ளும் தலை காட்டியது என்றே சொல்ல வேண்டும். கல்லும் மண்ணும் கலந்த உணவே அவருக்குக் கிட்டியது.

## 27. சிறை உடையும் உணவும்

தண்டனை அடைந்து சிறையில் கிடக்கும் கைதிகளை அந்நாளில் மனிதர் என மதிப்பது இல்லை; விலங்கினும் இழிந்த பிறப்பு என்றே ஆங்கிலேயர் எண்ணி வந்தனர்; அவ்வாறே சட்ட திட்டங்களும் செய்திருந்தனர்.

சிதம்பரனார் சிறைக்குள் புகுந்த பின்புதான் அங்குள்ள இழிநிலை அவருக்குத் தெள்ளெனப் புலப்பட்டது. அங்கே அவருக்குக் கொடுத்த உடையின் பெருமையை அவரது வாய்மொழியிலேயே விளம்புவோம்:

'மரத்தின் பட்டையென வரையத் தக்க
உரத்த துணியில் உருப்படுத் தியாநல்
கால்கள் இல்லாத கைகள் இல்லாத
கால்சட்டை ஒன்றும் கைச்சட்டை ஒன்றும்
அத்திரத் துணியில் அமைக்கப் பட்ட
மெத்தச் சிவந்த மேனியைக் கொண்ட
தலைக்குல் லாவெனச் சாற்றுவது ஒன்றும்
தலைக்குஒரு மூன்றுந் தந்தன கண்டேம்;
மூன்றையும் அணிந்திடின் முண்டமே யாகத்
தோன்றுவது அல்லது சொரூபம் தோன்றாது.'

ஆதி நாளிலே சுத்த வீரனுக்கு அரசர், வீர கண்டை அளிப்பது உண்டு. அதனை அவ்வீரன் தன் காலில் அணிந்து களிப்பது வழக்கம். வீர சிதம்பரனாருக்குச் சிறையிலே காலில் இரும்பு வளையம் ஒன்று பூட்டினர். கடுங்காவல் கைதிகளுக்கு அத்தகைய வளையம் காலில் பூட்டுதல் விதியாம்.

வீட்டிலே நாம் உணவு கொள்வதாயின், இலையோ, வட்டிலோ கையாளுவோம். சிறையிலோ, சாதத்தை வாங்கிப் புசிக்க ஒரு சட்டி கொடுப்பர். நீர் பருகுவதற்கோ, கலயம் ஒன்று கிடைக்கும். மண்ணாலான அச்சட்டியும் கலயமும் கண்டு சிதம்பரனார் சிரிப்பே கொண்டார். 'இந்திர போகத்தில் வாழ்ந்த இவ்வீரருக்கு இவையா தருவது?' என்று பிறகைதிகள் கதறியழுதார்கள்.

காலையில் மடிந்த கேழ்வரகுக் கூழே அவருக்கு ஆகாரம். அது மண் கலந்து காய்ச்சியதாய் இருக்கும். அதனை ஆடு மாடுகளும் மோந்து பாரா. எனவே, சிதம்பரனார் அக்கூழைக் குடிப்பது எப்படி? அதனைக் குடியாது, அவர் கீழே கொட்டி விட்டார். பகலிலும் மாலையிலும் அத்தகைய கேழ்வரகுக்களியே உணவாம். அதிலும் கல்லும் மண்ணும் நிறம்பி இருக்கும்.

அத்தகைய உணவைக் குறித்து அவர் தம் மனைவியாருக்குப் பாடல் வடிவில் வரைந்து அனுப்பினர். தமிழறிஞரும் கவிஞரும் அல்லவா அவர்! அப்பாடல் பின் வருவது :

'முக்கனியின் சாறெடுத்து முந்திரி,ஏலம்,பாதம்
அக்காரம், தேன்பாலோ டட்டுட்டக்—கக்கும் எனக்
கேழ்வரகின் கூழ்உண்டல் கேடறியா நின்மலர்த்தாள்
வாழ்வதொக்கும் கற்காட்டில் வந்து.'

'வாழை, மா, பலா ஆகிய முப்பழங்களின் சாற்றை எடுத்து, அதில் முந்திரி, வாதுமை, ஏலம், சர்க்கரை, தேன், பால் இவை கலந்து காய்ச்சி ஊட்டினும், எனது நா அதில் ஏதேனும் குறை இருப்பின் கக்கிவிடும். அந்த நாவோ, இப்போது கேழ்வரகுக் கூழைக்குடிக்க நேர்ந்துள்ளது. யாதொரு துயரமும் அறியாத உனது மெல்லிய பாதங்கள் கல்லே நிரம்பிய காட்டில் அலைந்து திரிவது போல உள்ளது, நான் கூழ் குடித்தல்,' என்பதே அப்பாடலின் பொருளாம். தேச நலங் கருதித் தியாகம் செய்தலின் அருமை பாருங்கள்!

## 28. துன்பமும் துயரும்

உணவும் உடையும் அவ்வாறு இருக்க, நம் சிதம்பரனார் கடுமையான வேலையும் சிறையிலே செய்ய நேர்ந்தது. எழுதுகோல் தாங்கி ஏடு எழுதிய கையினல், அவர் மாவரைக்க நேர்ந்தது. அதனல் அவர் கைகள் கொப்புளித்தன; தோலும் உரிந்து போயிற்று.

சிறை அதிகாரி அதுபார்த்தும் சித்தம் இரங்கவில்லை. கடுவெயிலில் மாடே போலச் செக்கு இழுக்க வேண்டும் என்று அந்த அதிகாரி ஆணை

இட்டான். விதியின்றி நம் சிதம்பரனாரும் செக்கு இழுத்தார் சிறிது காலம். ஒரு தினம் அவர் மூர்ச்சை கொண்டு கீழே விழுந்துவிட்டார். அது கண்ட கைதிகள், இரக்கம் பூண்டு, அவருக்குப் பதிலாகச் செக்கு இழுத்தார்கள்.

அவ்விதம் உதவாத உணவுண்டு, தாங்க முடியாத வேலை செய்து வந்ததனால், அவர் மிகவும் இளைத்துப் போனார். எடையிலே ஐந்தில் ஒரு பங்கு குறைந்துவிட்டார். அது பார்த்ததும், சிறையதிகாரிக்குச் சிறிது நடுக்கம் எடுத்தது. ஆதலினால், கேழ்வரகை விடுத்து, அரிசி உணவு தர அவர் மனமிசைந்தார்.

தமது சிறை வாழ்வைக் குறித்து நம் சிதம்பரனார், தம் தாயாருக்கும் தந்தையாருக்கும் எழுதியது இவ்வாறு

'சுவாமியே! தந்தையே! தூயநல் பெரியோய்!
அவாவியே வந்துஎனை ஆண்டு அருள் ஈசா!
மூன்றுஇரு திங்கள் முரண்சிறை இருந்தேன்
சான்றுஒரு கடவுளே தண்ணளி கூர்ந்து
விரைவினில் என்னை வெளியேற்றி அருள்க!
தரைமிசை நெடுநாள் தங்கிடச் செய்க!
இந்த வாரம் எடுத்த நிறுவையில்
ஐந்தில் ஒன்றாக அருகியது என் உடல்;
அரிசி உணவுக்கு அளித்தனன் அனுமதி!

* * *

சிரிய சின்னடி சிரமேல் கொண்டுயான்
பாரிய என்உளம் பாரதத் தாய்க்கும்
உரிமையொடு பெற்றுஎனை உவப்பொடு வளர்த்த
பெருமைசேர் அன்னைக்கும் பிறர்க்கும் எனது
மெய்மன வாக்கால் விரும்பி இன்று அளித்தேன்
தெய்வ வணக்கமும் சீர்தரும் வாழ்த்துமே!'

இங்கிலையில் தம் தேவியாருக்கு அவர் எழுதி விடுத்தது இதுவாகும்:

‘ திருவும் புகழும் சிறந்தன பிறவும்
மருவுற நிற்கும்என் மாசிலா மனைவியே!
என்னுரும் உயிரினும் என்உயர் உள்ளத்தினும்
மன்னுறப் பாதியை மகிழ்ந்துஉனக்கு அளித்தேன்;
பன்உள் அப் பாதியைப் பெரியகம் தேயத்தின்
தன் அடிக்கு அளித்தேன் சத்தியம் இஃதே!’

தாயாருக்கு எழுதியதில் சற்றே தளர்வு காணப் படலாம். உடல் தளர்ந்தது; அதனால் உள்ளத்தி லும் அத்தளர்வு தலை காட்ட நினைத்தது. தேவி யாருக்கு எழுதியதிலோ, தளர்வு என்பது பறந் தோடிவிட்டது. தமது உடலில் பாதியை அத்தேவி யாருக்கும், மற்றைப் பாதியைப் பாரததேவிக்கும் அளித்துள்ளதாகவே அவர் பேசுகிருர்.

சோற்ருல் அடித்த சுவர் நமது உடம்பு. அச் சோற்றின் தன்மைக்கு ஏற்ப உடல்வலி பெருகும்; குறுகும். உள்ளத்தின் வலியோ, ஒரு நாளும் குன்ருது. இதற்கு அவரே சான்று.

## 29. காசே பெரிது

நம்மவரின் வர்த்தக நலம் கருதியே சிதம்பர ஞர் நாவாய்க் கம்பெனி நிறுவினர். பலரும் தேசப்பற்று மிகுந்து பணங்கொடுத்து அந்தக் கம்பெனியை ஆதரித்தனர். சிலரோ, சுயநலமே கருதி, அக்கம்பெனியில் பங்கு கொண்டனர்.

ஆங்கில வர்த்தகரின் கடும்போட்டியையும், அதிகாரிகளின் பெருமிரட்டலையும் அவர் சமா

ளித்து நின்று, அக்கம்பெனியை வளர்த்து வந்தார். தேருக்கு அச்சாணி போன்ற அவரைப் பிடித்துச் சிறையில் போட்டவுடனே அக்கம்பெனி கலகலத்து விட்டது ; முடிவில் சிதைந்து முரிந்தும் போயிற்று.

அதனால், பணம் போட்டவர் அனைவரும் நஷ்டத்திற்கு ஆளாயினர். சுயநலக்காரரோ, அந்நஷ்டம் கண்டு மனக்கொதிப்பே கொண்டனர் ; அவர்மீது பழியும் சாற்றினர் ; 'இவர் அரசியலில் புகுந்து அனர்த்தம் விளைத்தாரே !' என்றும் தூற்றினர்.

அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. தங்களுக்கு உண்டான நஷ்டத்தை ஈடு செய்யவேண்டும் என்று சிதம்பரனரின்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வும் நினைத்தனர். அது கண்டு அவரது சிந்தை பெரிதும் நொந்தது. அப்போது தமிழ் மாகாணத் தின் பெருந்தலைவரான சேலம் விஜயராகவா சாரியாருக்கு அவர் ஒரு கடிதம் எழுதினர் :

"சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பொருள் கொடுத்து உதவிய அனைவருக்கும் எனது வணக் கம் உரியது. அது முறிந்து போனதால் உண்டான நஷ்டத்தைப் பங்குதாரர் ஏற்றுக்கொள்ள வேண் டும். ஏற்க அவர்கள் மறுத்தால், நான் ஈடு செய்யத் தயார். ஆனல், நான் விடுதலை அடையும் வரையில் அவர்கள் பொறுத்திருக்க வேண்டும்."

இவ்விதம் அவர் எழுதிய பின்னர் அக்கடன் காரரின் தொல்லையைக் குறித்துப் பெரிதும் சிந்தனை செய்தார். ஆயினும், அவரிடம் சோர்வோ, திகைப்போ உதிக்கவில்லை. இதற்கு ஆதாரமாக அவர் பாடிய செய்யுட்கள் இவை :

'எண்ணறிய துன்பங்கள் எய்தியுள வெஞ்சிறையை
நண்ணிடினும் நான் அஞ்சேன், நாவாயின்-எண்ணறியாது
என்னோர் என் தாள்நிதியை ஈயாது எனைக்கொடுக்கச்
சொன்னாலும் யான் அஞ்சேன் சோர்ந்து.

'என் மனமும் என் உடம்பும் என் சுகமும் என் அறமும்
என் மனையும் என் மகவும் என் பொருளும்—என் மனமும்
குன்றிடினும் யான் குன்றேன்; கூற்றுவனே வந்தாலும்
வென்றிடுவேன் காலால் மிதித்து!'

சுத்த வீரர், சோர்விலாத் தீரர், தேசமே பெரி தெனக் கொண்டவர், பரநலமே பாக்கியம் என நினைத்தவர், அக்கடன்காரரின் தொல்லை கண்டு துணிவே மிகுந்தார். 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினன் இலங்கை வேந்தன்,' என்று ஒரு கவிஞர் பாடிப்போனார். நம் சிதம்பரனாரோ, சிறிதும் கலங்கவே இல்லை. 'உயிரைக் கவரும் எமன் வந்தாலும் காலால் மிதித்து வென்றிடுவேன்!' என்றே வீரம் பேசுகிறார்.

'சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.'

'மாநிலம் தனது நிலை தெரியாமல் பொறை தாங்கி எவ்விதம் நிலைத்து நிற்கின்றதோ, அவ்வி தமே, சான்றோர் என்போர் எப்போதும் தமது நேர்மை குன்றாமல் நிலைத்து நிமிர்ந்து நிற்பர்,' என்பதே இக்குறளின் பொருளாம்.

## 30. சிறையிலும் சேவை

சிறையில் அதிகாரிகள் இட்டதே சட்டம்; செய்ததே தீர்ப்பு. அதற்குக் கேள்வி முறை இல்லை. 'இது அடுக்குமா?' என்று வாய் திறக்கக் கூடாது. மனத்துள்ளே புலம்பலாம். பிறரிடம் உரைத்தால், வந்துவிடும் மோசம்! எழுந்துவிடும் சித்திர வதை!

'அந்தோ! பாவம்! அவர்என் செய்வார்!
எந்தச் செய்தியும் இயம்பினல் அடிவிழும்!
அடியும், வெற்றடி அன்று; கம்பளம் போர்த்தி
அடியும் மிதியும் அநேகர் தருவர்
கம்பளம் போர்த்துமெய் வெம்பிட அடிப்பது
இச்சிறை அன்றிவேறு எச்சிறை யினும்இலை;
அடிப்பவர் கைதிகள்; அடிக்கச் சொல்வோர்
ஜெயிலினை ஆளும் ஜெயிலர் ஆகியோர்;
எவன்தான் அஞ்சான் இக்கம் பளஅடி!'

என்று சிறைக்குள்ளே நடைபெறும் சித்திர வதையைக் குறித்துச் சிதம்பரனார் பாடியிருக்கிறார். ஒரு கைதி மற்றொரு கைதியுடன் பேசக்கூடாது; தனது கஷ்டத்தை உரைத்து, ஆறுதல் அடையவும் ஒண்ணாது. வேறு கைதியுடன் பேசினல் உடல் முழுதும் கம்பளத்தைப் போர்த்து நையப்புடைப்பர்.

'நரகம்' என்று நூலோரும் மேலோரும் பேசுவர். ஆனல், நரகம் என்பதனை ஒருவரும் கண்டிரார். அங்கு நடக்கும் கொடுமையையும் அறிந்திரார். ஆங்கில ஆட்சியின் காலத்திலே சிறைக் கூடங்கள் அந்த நரகத்தினை எடுத்துக் காட்டுவன வாய் இருந்தன.

ஒரு சமயம் நம் சிதம்பரனரையும் கம்பளத்தால் போர்த்து, அடித்து மிதிக்க வேண்டும் என்று

ஜெயிலர் என்னும் சிறையதிகாரி ஆவல் கொண்டார்; அதற்கான ஏற்பாடுகளும் செய்தார். 'செக்கு இழுத்தோம்; அச்சித்திரவதையும் காண்போம்!' என்றே திடமுடன் இருந்தார் சிதம்பரனார்.

அடிக்க வந்தவனோ, அவரது திருமுகத்தைப் பார்த்தான்; தெளிவிய ஒளியைக் கண்டான்; இனிய மொழியை உணர்ந்தான்; எடுப்பான தோற்றத்தையும் அறிந்தான்; முடிவிலே கையெடுத்துக் கும்பிட்டு, அவருக்குக் குற்றேவல் செய்ய முற்பட்டான். அது கண்ட ஜெயிலர் யாது செய்வார்?

சிறை அதிகாரிகளுடன் சிதம்பரனார் பேசும் பான்மையையும், பிற கைதிகளிடம் காட்டும் பரிவையும் பார்த்த உடனே கைதிகளும் நன்னெறி கொண்டார்கள்; நேர்மையுடன் நின்றார்கள்; நிமிர்ந்து நடந்தார்கள். சிறை அதிகாரிகளும் விதியின்றிச் செம்மை மனம் கொண்டு தங்கள் செயலில் திருந்தினார்கள்.

கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரும், சிதம்பரனாரும் உள்ளமொத்த நண்பர்கள். சிதம்பரனாரின் வீரம் கண்டு பாரதியார் சொக்கிப் போவார். கவிஞரின் கருத்துயர்வு கண்டு சிதம்பரனார் சித்தம் குளிர்வார். சிறையிலே சிதம்பரனார் படும் துன்பம் கேட்டு, அக்கவிஞர் கலங்கினார்.

அந்நாளில் திலகர், சிதம்பரனார், லஜபதிராய் முதலிய ஒரு சிலரே, உயர்ந்த புருஷரே, உத்தம சீலரே, சிறையில் கிடந்து நலிந்தனர். அது அறிந்து அக்கவிஞர் பொருமினார்; கடவுளை நோக்கிக் கதறினார்; உதாரணமாக,

'மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதும் காண்கிலையோ!

'மாதரையும் மக்களையும்
வன்கண்மை யால்பிரிந்து
காதல் இளைஞர்
கருத்தழிதல் காணையோ!'

என்று அப்பாரதியார் மனங் கரைந்து பாடி யிருக்கிறார். சிதம்பரனாரையும் பிறரையும் கருத்தில் கொண்ட அக்கவிஞர் அன்னாரை மேலோர், நூலோர் என்று கூறுகிறார். எனவே, 'அன்னவர் அரிய பிறவி கொண்டவர்; ஆன்ற அறிவு உடையவர்; சீரிய நூல் வரைபவர்,' என்பது அக் கவிஞரின் மதிப்பாம்.

அத்தகைய அறிவாற்றல் உடையாருக்குச் சிறையா ஏற்ற இடம்? அன்னிய ஆட்சியிலே சுதந்தரங் கருதிப் பாடுபடுகையில் வேறு எப்பதம் கிட்டும்? பல வகையினும் பெரியோர் அங்ஙனம் வருந்தாவிடின், பிறருக்கு நல்வாழ்வு வகுத்தல் எங்ஙனம் இயலும்?

## 31. கலெக்டரின் படுகொலை

முற்றத் துறந்தவரான பட்டினத்தடிகள், தம் தாயாரின் காலகதியை அறிந்ததும், 'என் அன்னை இட்ட தீ அடி வயிற்றிலே,' என்று கூறினார். நம் சிதம்பரனாரோ, திருநெல்வேலிச் சீமையிலே மக்களின் மனத்திலும் சுயராஜ்ய தாகம் என்னும் தீயைக் கொளுத்தி வந்தார்.

நம் சிதம்பரனாரைப் பிடித்துச் சிறையில் போட்டுவிட்டால், அத் தீ அவிந்து போம் என்று ஆங்கில அதிகார வர்க்கம் கருதியது; அடக்கு முறைகளைக் கையாண்டு வேறு பலரையும் சிறைக்குள் தள்ளியது. அதன் பலன் என்னாயிற்று ?

ஒரு கல்லை எடுத்துச் சுவரின்மீது வீசி எறிந்தால், அக்கல் சுவரைத் தாக்கியதும், எறிந்தவன் மீது திரும்பி வந்து பாயும் அல்லவா? அமரிக்கையுடன் நடைபெற்று வந்த சுதேசியக் கிளர்ச்சி, அதிகார ஆணவத்தால் பயங்கரப் புரட்சியாய் மாறலாயிற்று. பிள்ளைக்கு விதித்த கொடுந் தண்டனை கொடிய குழப்பத்தையே மூட்டியது.

1911-ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 17-ஆந் தேதி திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டரான ஆஷ் என்பவர் இரயில் வண்டியிலே சென்றுகொண்டிருந்தார். அந்த ஜில்லாவைச்சேர்ந்த மணியாச்சி என்னும் இரயிலடியில் அவ்வண்டி வந்து நின்றது. அதே வண்டியில் ஓர் இளைஞர் அக்கலெக்டரைக் குறிக்கொண்டு தொடர்ந்து வரலானார்.

அந்த இளைஞர் தமது கைத்துப்பாக்கி கொண்டு அக்கலெக்டரைச் சுட்டுக் கொன்றார். உடனே மலங்கழிக்கும் இடம் சேர்ந்து, தமது வாய்க்குள் அத்துப்பாக்கியை இட்டுத் தம்மையும் சுட்டுக்கொண்டார். அதன் விளைவாக அவ்விளைஞரின் தலை சுக்கல் சுக்கலாக நொறுங்கிவிட்டது. அவர் யார்?

அந்த இளைஞர் திருவாங்கூர் நாட்டைச் சேர்ந்த செங்கோட்டை நகரவாசி. இரகுபதி ஐயர் என்பவரின் ஒரே புதல்வர். காட்டிலாக்காவில் ஒரு

குமாஸ்தாவாய் வேலை பார்த்து வந்தவர். அவர் பெயர் **வாஞ்சி ஐயர்** என்பது. அவரது சட்டைப் பையிலிருந்து கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

'அதிகாரிகளின் அடக்குமுறையின் கொடுமை மிதமிஞ்சிவிடின் அது வெடிகுண்டு வீச்சுக்கு மார்க்கமாகும்,' என்று மார்லி பிரபு மொழிந்தார் அல்லவா? அவ்வாறே, நமது தமிழகத்திலும் பயங்கரப் புரட்சி இயக்கமானது துப்பாக்கிவேட்டு என்னும் வடிவு கொண்டது. அதில் இளைஞர் பலர் ஈடுபட நேர்ந்தது.

அத்தகைய இளைஞருள் ஒருவரே வாஞ்சி ஐயர். அவருக்குத் தோழர் பலர் உண்டு. அவர்கள் யார் யாரென அதிகாரிகள் தேடித் துருவினர். அதன் பயனாக நீலகண்ட பிரமசாரி, தென்காசி சிதம்பரம் பிள்ளை முதலிய பதினொரு பெயர்களை அதிகாரிகள் கைது செய்தார்கள். இரகசிய சங்கங்களை நிறுவி நம் தமிழகத்திலே பல இடங்களில் பயங்கரப் புரட்சியை உண்டு பண்ண முயன்றதாக அவர்கள் மீது வழக்கு நடத்தினார்கள் அதிகாரிகள்.

அவர்களுள் ஐவர் தவிர மற்றையோர் பலவாறான சிறைத் தண்டனைகளுக்கு ஆளாயினர். 'குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டாற் போல' என்பர். அவர்களின்மீது வழக்கு நடந்து வருகையில் அதன் விவரமும் போக்கும் கண்டு மக்களின் மனத்திலே சுயராஜ்ய சுதந்தரத் தீ கொழுந்து விட்டது.

## *32. இலக்கியப் பணி

நாமகளின் நல்லருள் கொண்டோர், எங்கே இருந்தாலும் என்ன? நன்னூல்களை இயற்றவும், நன்மொழிகளை வரையவும் அவர்களது மனம் குவியும். பால கங்காதர திலகர், மாண்டலே நகரின் சிறையில் கிடந்த பொழுது **கீதா ரகசியம்** என்னும் பெருநூலை எழுதி வந்தார்.

பண்டித ஜவாஹர்லால் நேருவோ, தாம் சிறையில் இருந்த பொழுது நமது சுயசரிதையாம் அற்புத இலக்கியத்தை வரைந்து வந்தார்; கடைசியிலே, ஆமது நகரக் கோட்டையில் காவலில் இருந்த காலையில் 'இந்தியாவை உணர்ந்து அறிந்தது' என்னும் ஈடிலாக் காவியத்தை எழுதி உதவினர்.

பேரறிஞர் பெருஞ்சிறையில் கிடத்தல், எல்லாம் ஒரு நன்மைக்கே என்னும் முதுமொழி போலாகும். திலகரும் நேருவும் அருஞ்சிறையில் கிடவாவிடின், அந்த அரிய பெரிய நூல்களை உலகோர் படித்தறியச் செய்யச் சமயம் வாய்த்திருக்குமோ?

சிதம்பரனர் இளமையிலேயே தமிழ் மொழியில் ஆர்வம் மிகுந்தவர்; தமிழ் நூல்கள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தவர்; சிறையிலே கிடந்த பொழுது இன்னும் பல நூல்களை பழுதற ஓதி உணர்ந்தார்; கோவை, கண்ணனூர் இச்சிறைகளில் இருந்த பொழுதோ, இனிய நூல்களை இயற்றத் தொடங்கினர்.

அப்போது அவர் இயற்றிய நூல்கள் **மெய்யறிவு, மெய்யறம்** எனப்படும். அவ்விரண்டும் ஞானிகளுக்கு மட்டுமேயன்றி, எல்லாருக்கும் பயன் படும்படியான எளிய இனிய நடையில் அமைந்துள. மேலும்,

ஆங்கில நாட்டு ஞானியாரான ஜேம்ஸ் ஆலன் என்பார் இயற்றியுள்ள நூல்களைத் தழுவி, ' மனம் போல் வாழ்வு ', ' அகமே புறம் ', ' வலிமைக்கு மார்க்கம் ' என்னும் சிறு நூல்களை வரைந்தார்.

அவற்றுள் 'மனம்போல் வாழ்வு' என்னும் நூலோ, பிள்ளை அவர்கள் சிறையில் இருந்தபோதே அச்சு வாகனமேறி வெளிவந்தது. அந்நூலின் காகிதம், அச்சு, மை, கட்டடம் அனைத்தும் சுதேசியமாய் விளங்கின. பிற நூல்கள் பின்பு வெளிவந்தன.

தெய்வத் தமிழ் மறை என்னும் திருக்குறளைச் சிறைக்கோட்டத்தில் கிடந்த போது சிதம்பரனர் மேலும் ஆராய்ச்சி செய்து வந்தார். ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும் பாயிரத்தோடு எல்லாரும் படித்தல் வேண்டும். அக்குறளைப் படியாதவன் தமிழன் ஆகான்,' என்று அவர் அடிக்கடி சொல்லுவார்.

அந்நூலுக்கு ஒரு பதின்மர் உரை கண்டுளர். அந்த உரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர் எல்லாரும். ஆயினும், மணக்குடவர் என்பார் எழுதியுள்ள உரையை அவர் ஆராய்ந்து தமது ஆராய்ச்சியின் முடிவையும் வரைந்து, அதனை வெளியிட்டிருக்கிறார். பலரும் அதனைப் படித்து இன்புறலாம்.

திருக்குறளிலே அறத்துப் பால் என்பதனை அவர் ஆங்கில மொழியில் பெயர்த்து உதவியிருக்கிறார். தமிழறியாத ஆங்கிலேயரும் பிறரும் அந்நூலின் அருமை பெருமைகளை அறிந்துகொள்ள வேண்டும் என்பதே அவரது ஆசை. ஓய்ந்த நேரங்களில் எல்லாம் தமிழ் நூல்களை ஆராய்வார்; அவற்றின் அருமை கண்டு ஆனந்தம் அடைவார்.

# 33. குணசீலம்

குணமும் நலமும் குலமும் ஒருவருக்கு இயற்கையில் அமையும் பெரும்பேறுகளாம். "நான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக!" என்று பெரியோர் நடந்து வருவர். கிடைத்த தின்பண்டத்தைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுத்தும், அறிந்ததைகளை அனைவர்க்கும் உரைத்தும், வயதில் ஒத்த பிள்ளைகளுக்குத் தலைமை தாங்கியும் சிதம்பரனார் இளமையிலேயே தமது குணநலத்தை வெளிப்படுத்தினார்.

பிள்ளைப் பிராயம் நீங்கி வாழ்க்கை நடத்தப் புகுந்ததும் அக்குணநலம் அவரிடம் விரிந்து பரவலாயிற்று. ஆனது பற்றியே ஏழைகளுக்கு இரங்கியும், கைம்மாறு கருதாமல் எளியவருக்காக வாதித்தும் பரநலத்தை அவர் பேணி வந்தார். அதன் முதிர்ச்சியாகவே தேசப்பணியில் அவர் ஈடுபாடு மிகுந்து, தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் உண்மையில் வழங்கத் துணிந்தார்.

அத்துறையிலே தமக்கு ஆபத்தெல்லாம் நேரும் என்பது தெரிந்தும், அவர் சிறிதும் பின் வாங்கவில்லை; முடிவு வரையில் முனைந்து நின்று, மெய்ம்பே விளைத்தார். வீடு வாயிலையும், உற்றார் பெற்றாரையும் துறந்து, சிறைக்குள் புகுந்துபோது, 'இதுவே உடலெடுத்த பயன்!' என்று உலகறியக் கூறினார். இன்னல்கள் நேர்ந்த காலத்தும், அவர் இம்மியளவும் தமது ஆண்மையில் குன்றவில்லை.

அடையா நெடுங்கதவும், 'அஞ்சல்!' என்ற சொல்லும் உடையவர் அவர். வருவாய் மிகுந்து நின்ற காலத்தும், சுருங்கிநின்ற காலத்தும் அவரது இல்லம் அன்னசத்திரமே போலத் துலங்கியது.

பாவாணர், பேரறிஞர் இவர்களுடன் இனிய உரை யாடுவதிலேயே அவர் ஆனந்தம் கொள்வார்.

தில்லைச் சிதம்பரம் என்னும் நகரிலே நந்தனர் கழகம், நந்தனர் பாடசாலை என்னும் கல்வி நிலையங்கள் உள்ளன. அவற்றின் கர்த்தாவும் தலைவரும் சுவாமி சகஜானந்தர் எனப்படுவார். அறிவு நலமும், தமிழ்ப் பயிற்சியும் ஊட்டி அவரை உயர்நிலைக்குக் கொண்டு வந்தவர் நம் சிதம்பரனாரே.

‘தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றூர் எனக்கழறும்—மாமறைக்குச்
சான்ருும் சிதம்பரம் என் தந்தை நினைக்கண்டேன்
நான்மாறு என் செய்வேன்? நவில்.

‘கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டில் என்றனக்கு
மெய்ம்மாட்டின் றருளும் வித்தகனே!-செம்மறையின்
பாவனைத்தும் சிந்தை பதித்தேன் சிதம்பரம்என்
தேவ! நினது இன்னருளால் தேர்ந்து.

‘சாவா மருந்துஎனவே தற்பரனார் வள்ளுவர்செய்
பாவால் அறிவுஎனக்குப்—பாலித்த தேவா!
சிதம்பரம்என் சற்குருவே! சிந்தையினில் நின்னின்
பதம்பெற்றேன் என்றும் பணிந்து.’

என்னும் இப்பாக்கள் மூன்றும், சுவாமி சகஜானந்தர் பாடியவை. இவற்றில் சிதம்பரனாரின் குண நலங்கள் ததும்பும். (அச்சுவாமிகளுக்கு மட்டுமே அல்லாமல், வேறு பலருக்கும் தமிழறிவையும் ஆர்வத்தையும் சிதம்பரனார் ஊட்டியுள்ளார்.) ராஜாஜியும் ஒரு சமயம் சிதம்பரனாரிடம் திருக்குறளைப் பாடங்கேட்டு வந்தார். பாடம் சொல்லுதலுக்குப் பிறந்தவர் அவர்.)

நன்றியறிவு என்னும் சிறந்த குணம் சிதம்பரனாரிடம் மிகுதியும் உண்டு. ஆதியிலே சுதேசி

நாவாய்ச் சங்கம் தொடங்கும் முயற்சியில் அவருடன் உள்ளமொத்து உழைத்து வந்தவர் தூத்துக்குடி வர்த்தகரான ஆறுமுகம் பிள்ளை என்பவர். அப் பிள்ளைபால் தமக்குள்ள நன்றியறிவைப் புலப் படுத்தவே தம் இரண்டாம் பிள்ளைக்கு ஆறுமுகம் என்று சிதம்பரனார் பெயரிட்டார்.

சிதம்பரனார் சிறைக்குள் கிடந்த பொழுதும் அதன்[1] பின்னரும் அவருக்கு உதவி புரிந்து வந்தவர் தென்னாப்பிரிக்காச் செல்வரான தில்லை யாடி வேதியப் பிள்ளை என்பவர். அவரது பெயரையே தம் இரண்டாவது புதல்விக்கு இட்டு மகிழ்ந்தார் சிதம்பரனார். அப்புதல்வி, 'வேதவல்லி' எனப்படு வாள்.

கோவைச் சிறைக்கூடத்தில் அவர் இருந்த காலையிலே அவருக்குப் பெருந்துணைவராய் அமைந் தவர் கோவைப் பெரியாரான திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியார். அவரது பெயரையே பிள்ளை தம் மூன்றாம் மைந்தருக்குச் சூட்டிக் களித்தார்.

வழக்கறிஞர் சிறைத்தண்டனை பெற்றால், நீதி மன்றத்தில் தோன்றி வழக்காடும் உரிமைப் பத்தி ரத்தை அரசாங்கம் பறித்துவிடும். சிதம்பரனாரின் அந்த உரிமையை அதிகார வர்க்கம் பறித்து விட்டது. விடுதலை பெற்று வெளியே வந்து வாழ் வுக்கு வருந்திய போது, அந்த உரிமையை மீண்டும் தர வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றத் தில் அவர் மனுச்செய்து கொண்டார். நீதிபதி வாலஸ் என்னும் ஆங்கிலேயர், அந்த உரிமையை உவந்து அளித்தார். அதுபற்றி அந்நீதிபதியின் பெயரை மறவாதிருக்கத் தம் கடைசிப் புதல்வருக்கு வாலீசு வரன் என்று அவர் பெயரிட நேர்ந்தது.

வாலிபரான தேசபக்தரைக் கண்டால் சிதம்பரனார் விருப்பம் மிகுந்து, விழுமிய வார்த்தைகள் பேசி, ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி, உயர்நிலை அடையச் செய்வார். 'எல்லாரும் எய்தற்கரிய இனிய உயர்நிலை எய்த வேண்டும்,' என்பதே அவரது இயற்கை நலமாம். இதனைச் சில ஜனத் தலைவர்களிடம் காண்பது அரிது.

நான்கு காங்கிரஸ் ஊழியர்மீது ஆங்கில அரசாங்கம் 1927-ஆம் வருஷம் ராஜ நிந்தனை வழக்குத் தொடங்கிற்று. அப்பெரு வழக்கில் யாதொரு கைம்மாறும் கருதாது பல மாதகாலம் தரும வக்கீலாய் வாதித்து, அன்னாருக்கு அந்நாளில் உணவும் இருக்கையும் அளித்து உதவியவர் நம் சிதம்பரனாரே. அவர் குடும்பத்தாரும் அந் நால்வர் மீதும் அன்பு காட்டி வந்தனர்.

## 34. நாட்டாரின் நன்றி

ஏறக்குறைய நாலரை ஆண்டுகள் சிறைவாசம் செய்த பின், 1912-ஆம் ஆண்டு, டிஸம்பர் மாதம் சிதம்பரனார் விடுதலை அடைந்தார்; அடைந்ததும் சிறிது காலம் சென்னை நகரிலேயே சிந்தாதிரிப்பேட்டை, திருமயிலை, பிரம்பூர் முதலிய இடங்களில் வசித்து வந்தார். அப்பொழுது சென்னைச் சுதேசமித்திரன் அதிபர் திரு. அரசங்கசாமி ஐயங்காரும், வாவிள்ளா வேங்கடேசுவர சாஸ்திரிகளும் அவரைப் பெரிதும் பாராட்டி ஆதரித்து வந்தனர். சிலர் ஏனோ தானோ என்று இருந்தனர்.

வாழ்க்கையை நடத்துவதில் அவருக்கு மிக்க சிரமம் நேர்ந்தது. பிறரிடம் சென்று தம் குறை

யாது மார்க்கம்?' என்றே அவர் சிந்தனை செய்து நின்றார். பலவாறான துறைகளில் உள்ள தொழிலாளரைத் திரட்டிப் போர் தொடுக்க வேண்டும் என்னும் கருத்துடன் தொழிலாளர் இயக்கத்தில் அவர் முனையலானார். 'மாடு இளைத்தாலும் கொம்பு இளையாது அல்லவா?'

இவ்விதம் அவர் தொழிலாளரைத் திரட்டி வருகையில் நமது தேச அரசியலிலே காந்தி மகான் தோன்றினார். அஹிம்சையே காந்தியின் கட்டளைக் கல். அது கொண்டு உலகையே வெல்லலாம் என்பது மகாத்மாவின் கருத்தாகும். அந்நிலை கண்டார் சிதம்பரனார். காந்தியின் செல்வாக்கு வரவரத் தேசத்திலே உயர்ந்து வந்தது; அஹிம்சைக் கொள்கையும் வளர்ந்து வரலாயிற்று.

அக்கொள்கை சிதம்பரனாருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும், இந்திய அரசியல் உலகம் அந்தக் கொள்கையில் ஆழ்ந்து கிடப்பதை அவர் கூர்ந்து அறிந்தார்; 'எதிர் ஆறு நீந்தக்கூடாது,' என்பதைக் கண்டார். தவிர, பெரிய இயக்கம் ஒன்று அம்மகான் நடத்துகையில் தாம் குறுக்கிடக் கூடாது என்றும் முடிவு கொண்டார்; ஆதலினால், அக்கொள்கையை எதிர்த்துப் பேசாமல் அரசியலிலிருந்து விலகி நிற்கலானார்.

எவ்விதமாயினும் தேசத்தினுக்கு விரைவில் சுயராஜ்யம் வந்தெய்த வேண்டும் என்னும் துடிப்பு அவரிடம் சிறிதும் குன்றவில்லை. காந்தி மகான் நடத்தி வந்த போரின் போக்கை அவர் நாள் தோறும் நன்கு ஆராய்ந்து நின்றார். 'பழஞ்சிங்கம் சும்மா இருக்கிறதே!' என்று பலரும் சிந்திக்கத் தொடங்கினர். 'காலத்தை மதித்து ஒதுங்கி நிற்கின்றேன்,' என்றே சிதம்பரனார் இசைக்க நேர்ந்தது.

ஆயினும், நம் தலைவர்கள் அவரிடம் மிக்க மதிப்பு வைத்திருந்தார்கள்; அவரது சேவையையும் சிறப்பித்துப் பேசினார்கள். வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயைத் தேடும் நேரம் போக, ஏனைய நேரங்களில் அவர் தமிழாராய்ச்சி செய்தார்; சுப்பிரமணிய பாரதியாரின் இனிய தேசிய கீதங்களை வாசித்து மகிழ்ந்தார்; பிறரைப் பாடச் சொல்லிக் கேட்டும் பரமானந்தம் அடைந்தார். 'ஏழைகளின் துயரம் எப்போது தொலையும்? நாடு எப்போது செழிக்கும்? சுய ஆட்சி எப்போது உதிக்கும்?' என்றெல்லாம் எண்ணியெண்ணி இரங்கினார்.

1932-ஆம் ஆண்டு அவரது அறுபதாமாண்டு நிறைவு விழா நடந்தது. அதனையொட்டி அவருக்கு ஒரு பண முடிப்பு அளிக்க வேண்டுமென்று அன்பர் சிலர் முயன்றனர்; அதற்காகப் பொருளும் திரட்டினர். ஆயினும், போதிய அளவு பொருள் சேரவில்லை. 'புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தைக் கொண்டு போயிற்று!' என்பார்கள். அவ்வாறே புதிய காந்தி இயக்கத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் அத்தருவாயில் பழைய இயக்கத்தையும் தொண்டையும் மறந்தே நின்றார்கள் என்றே சொல்ல வேண்டும்.

தலைவரானோர்கள் இறந்த பின்னர் அவர்களைப்பற்றி அற்புதமாக வியந்து ஓதித் திருவிழா கொண்டாடும் வழக்கம் இக்காலத் தமிழ் நாட்டில் மிகுந்துவிட்டது. எனவே, தேசத்திற்காக அரும் பணியும் தியாகமும் செய்த சிதம்பரனார், பாரதியார் போன்றவர்கள், தமது வாழ்நாளிலே வறுமையால் வாடி வருந்த நேர்ந்தது. முதுமையிலே நோயும் வந்து சிதம்பரனாரை வாட்டியது.

வறுமையும் நோயும் சூழ்ந்து நின்ற காலத்திலும், தமது நிலையை அவர் நினையாமல், ஏழைகளின் நிலையையே எண்ணித் துயருற்றார்; தம்மைப் பார்க்க வருவோரிடம் தேசநிலையைக் குறித்தே உரையாடினார்! தமது குடும்ப நிலையைக் குறித்து [illegible]ன்றும் பேசினாரல்லர். 'தேசத்தை வாட்டிவரும் [illegible]ப்பிணி எப்போது அகலும்?' என்றே யாவரையும் கேட்பார். 'இப்பவோ பின்னையோ என்னும் நிலையில் உள்ள நீங்கள் வீணே வருந்தல் வேண்டா,' என்று நண்பர்கள் வற்புறுத்துவார்கள்.

'பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலா மென்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினால் தலைவ ராகிக்
காங்கிரஸை நடத்தியதைக் கண்டு நொந்து,

'தேசநலம் தியாகமின்றி வருமோ?' என்று
திலகர்பிரான் செய்தபெருங்கிளர்ச்சி சேர்ந்து
ஓசைபடா துழைத்தபல பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரமும் ஒருவ னாவன்.'

என்று நாமக்கல் கவிஞர் துதிக்கின்றார்.

'சிதம்பரமும் ஒருவனாவன்,' என்று நாமக்கல் கவிஞர் நவின்றிருப்பதை நாம் 'சிதம்பரமே சிறந்தோனாவன்!' என்று கூறி மகிழ்வோம்!

ஜெய் ஹிந்த்!

---

The Progressive Printers, Madras-1.

XVC 34
XVC:34